ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

மே—1963



கேரள தலைமை ஆசிரியர்கள்
மாநாட்டின் தலைவர்

திரு. ராஜாஜி



ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

சென்னை மாநில எய்டட் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்



மாநில சங்கத் தலைவர்
திரு. பி. வீரராகவன்
(ஆசிரியர் : "ஆரம்பக்கல்வி")

மாநில சங்கம்
பொதுக் காரியதரிசி
திரு. ஏ. ஆர். சேஷாசலம்

CONNEMARA PUBLIC L

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } மே 1963 { இதழ் 5

பஞ்சாயத்து யூனியன்களும் பாடப் புத்தகங்களும்

"மக்களாட்சிக் கோட்பாட்டை வளர்க்கும் மாண்புமிக்க அமைப்புகள்"

"ஜனநாயகப் பண்பாட்டைக் கட்டிக் காக்கவல்ல சால்பு நிறைந்த மன்றங்கள்"

"நாடும் ஏடும் ஒருங்கே போற்றிப் புகழவேண்டிய தனிசிறந்த நிறுவனங்கள்"

"சிற்றூர் மக்களுக்கும் ஆட்சிக் கலையில் சிறந்த தேர்ச்சியை அளிக்கவல்ல சீர்மிகு ஏற்பாடுகள்"

"இந்தியாவின் வரலாற்றில் இணையற்ற ஓர் அத்தியாயத்தைச் சேர்க்கத்தக்க செம்மையும் செழுமையும் படைத்த உள்ளாட்சி நிறுவனங்கள்"

"பன்னெடுங்காலமாக இந்நாட்டில் இருந்துவரும் பஞ்சாயத்து ஆட்சியின் மகத்தான மறுமலர்ச்சி எனத்தகும் எழில்நிறை ஏற்பாடுகள்"

பஞ்சாயத்து யூனியன்கள் எனப்படும் ஊராட்சி ஒன்றியங்களும், அந்த யூனியன்களைக் கட்டிக் காத்து நடத்திச் செல்வதற்குரிய பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் எனப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களும் தமிழ்த்திருநாட்டில் நிறுவப்பட்டபோது, இப்படியெல்லாம்தான் அந்த அமைப்புகளைப்பற்றிப் "போற்றித் திரு அகவல்கள்" வாசிக்கப்பட்டன; "பாராட்டுத் தாள்கள்" அடுக்கடுக்காகப் படித்தளிக்கப்பட்டன; "வாழ்த்துரை வெண்பாக்கள்" ஒன்றன்பின் ஒன்றாக இசைக்கப்பட்டன.

பல்வேறு அரசியல் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் பத்திரிகை ஆசிரியர்களும் பலதுறைப் பிரமுகர்களும் மட்டுமல்ல, நாடாளும் நல்ல பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் பெருமக்களும் இப்படியெல்லாம்தான் ஏற்றியும் போற்றியும் பாராட்டியும் வாழ்த்தியும் பேசலானார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஓங்கி உயர்ந்து ஒளி வீசித் திகழவேண்டிய ஜனநாயகப் பெருமாளிகைக்கான ஆணிவேர் போன்றவை இந்த அமைப்புகள் என்னும் கருத்தை, அமைச்சர்கள், வற்புறுத்திப் பேசாத நாளில்லை; எடுத்துக்கூறி விளக்கம் தராத சமயமில்லை. பத்திரிகைக் கட்டுரைகள், ஆண்டு வெளியீடுகள், பொதுக் கூட்டச் சொற்பொழிவுகள், மாநாடுகளுக்கான வாழ்த்துச் செய்திகள் என்னும் பல்வேறு துறைகளாலும் முறைகளாலும் இந்தக் கருத்தை அவர்கள் எடுத்தெடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

ஆனால் அண்மையில் தமிழ்நாட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ள ஓர் உத்தரவு, பஞ்சாயத்து யூனியன்களைப்பற்றி அவர்கள் இதுவரை தெரிவித்துவந்த பாராட்டு மொழிகளுக்கு நேர்மாறான தன்மை படைத்ததாக இருக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஏறத்தாழ ஐம்பது ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களுக்கான பாடப் புத்தகங்களை இதுவரை பஞ்சாயத்து யூனியன்களே தேர்ந்தெடுத்து வந்தன. இந்த ஆண்டிலிருந்து இந்த முறையில் பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படலாகாது என்றும், ஏறத்தாழப் பதினைந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒன்று என்கிற வீதத்தில் கல்வி அபிவிருத்திக் கவுன்சில்கள் (District Development Council) பல அமைக்கப்பட்டுள்ளன என்றும், ஒவ்வொரு கல்வி அபிவிருத்திக் கவுன்சிலின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பள்ளிக்

கூடங்கள் யாவற்றிற்கும் பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கிற உரிமை அந்தக் கவுன்சிலுக்கே உண்டு என்றும், அண்மையில் அரசாங்கத்தார் வெளியிட்ட ஆணை அறிவிக்கிறது.

எத்தனை முறை சிந்தித்துப் பார்த்தாலும் இத்தன்மைத்தான ஓர் தாக்கீதை ஆட்சியாளர்கள் எதற்காகப் பிறப்பித்துள்ளார்கள் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ளவே முடியவில்லை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் உள்ள நண்பர்கள் பலரையும் கேட்டுப் பார்த்தோம். அவர்களும் இதற்கான காரணம் இன்னது என்று புரியவில்லை என்றே இயம்புகிறார்கள்.

எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆட்சிக்கு உட்பட்டுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கான பாடப்புத்தகங்களை அந்தப் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்கும் முறைதான், நியாயமானதாகவும் பொருத்தமானதாகவும் ஜனநாயகக் கோட்பாட்டுக்கு இசைந்து வருவதாகவும் நலன் பல நல்கத்தக்க தாகவும் இருக்கிறது.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நிர்வாகம் செய்யும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம்தான் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடங்களை நிறுவுவது, அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவது, அவற்றிற்கு உரிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பது, அவற்றிற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பது, கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள் தளவாடங்கள் முதலியவற்றை வாங்குவது முதலிய எல்லாப் பணிகளையும் பஞ்சாயத்து யூனியன்கள்தான் ஆற்றிவருகின்றன. இத்தனைப் பணிகளையும் ஆற்றி வருகிற காரணத்தால் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. இந்தப் பள்ளிக்கூடங்களின் தன்மை திறமை தகுதி ஆற்றல் ஆகியவற்றைப் பற்றிய தெள்ளத் தெளிவான அறிவும் இந்த யூனியன்களுக்கே இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கான பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் இந்த யூனியன்களுக்கு இருப்பதுதானே நியாயம்? அதுதானே முறை, ஒழுங்கு, நீதி, ஜனநாயகம்? பள்ளிக்கூடங்களை நடத்தும் பொறுப்பு யாரிடம் இருக்கிறதோ அவர்களிடமே பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் இருப்பதுதானே பொருத்தமான ஏற்பாடு? இத்தகைய ஏற்பாட்டை ஒதுக்கித்தள்ளி விட்டு இப் பள்ளிக்கூடங்களோடு சிறிதும் தொடர்பில்லாத — எங்கோ தொலைவில் இருக்கிற — கல்வி அபிவிருத்திக் கவுன்சில் களிடம் புத்தகங்களைத்தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஒப்படைத்தால்,

சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் நிலை எப்படி உருவாகும்? பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், அந்தப் பள்ளிக்கூடங்களிற் பயிலும் மாண வர்களின் இயல்புக்கும் போக்குக்கும் ஏற்ற புத்தகங்களை அந்தக் கவுன்சில்களால் தேர்ந்தெடுக்கமுடியும். ஆனால் அத்தகைய தொடர்பைப் பெற்றிராத – பெறமுடியாத கல்வி அபிவிருத்திக் கவுன்சில்களால் அந்த அளவுக்குச் சிறப்பாகப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க முடியாது என்னும் உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து பறித்து விட்டதற்குரிய காரணம் யாது என்பது நம்மால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இந்த யூனியன் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான தகுதி இல்லை—அதற்குத் தேவையான அறிவு ஆற்றல் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறதா? அப்படிப்பட்ட கருத்து அரசாங்கத்திற்கு இருக்குமானால் இதைவிட வருந்தத்தக்க நிலை வேறொன்று இருக்கமுடியாது. பஞ்சாயத்து யூனியனின் அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லாக் கிராமங்களையும் ஆட்சி செய்கிற தகுதி இந்த உறுப்பினர்களுக்கு இருக்கும்போது — அந்தக் கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் தேவையான ஆற்றல் இந்த உறுப்பினர்களுக்கு இருக்கும்போது—அந்தக் கிராமங்கள் தொடர்பான வரி விதிப்பு, பலதுறைச் செலவு செய்தல் முதலிய அதிகாரங்களைக் கையாள்வதற்குத் தேவைப்படுகிற திறமையும் தகுதியும் இந்த உறுப்பினர்களுக்கு இருக்கும்போது—பள்ளிக்கூடங்களை நிறுவுவதற்கும் நடத்துவதற்கும் கண்காணிப்பதற்கும்தேவையான அறிவும்ஆற்றலும் இவர்களுக்கு இருக்கும்போது, பாடபுத்தகங்களைத் தக்கமுறையில் தேர்ந்தெடுக்கிற திறமை மட்டும் இவர்களுக்கு இல்லை என்று அரசாங்கமே தெரிவித்தாலும் சரி, அதனை நாடு ஏற்றுக்கொள்ளாது; நல்லறிஞர்களின் உள்ளங்களும் ஏற்றுக் கொள்ளமாட்டா.

பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான திறமை கூட இந்தப்பஞ்சாயத்து யூனியன்களுக்கு இல்லை என்று அரசாங்கம் கருதுமானால்—இந்த யூனியன்களின் அறிவாற்றலில் அரசாங்கத்திற்கு நம்பிக்கையில்லையென்றால், இந்த யூனியன்களை அரசாங்கம் எதற்காகவைத்திருக்கவேண்டும்? இந்த யூனியன்களின் ஜனநாயக சிறப்பைப்பற்றி அமைச்சர்கள் எதற்காக ஓயாமல் புகழுரைகளைப் பொழிந்து கொண்டிருக்க வேண்டும்?

மற்றோர் உண்மையையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட வேண்டியது நம்முடைய கடமையாகிறது. தமிழ் நாடு முழுவதிலும்

ஏறத்தாழ 375 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் உள்ள பாடப்புத்தகப் பதிப்பகங்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ இதே அளவுடையதாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், பாடப்புத்தகங்களைப் பஞ்சாயத்து யூனியன்களே தேர்ந்தெடுக்குமானால், வெவ்வேறு கவுன்சில்கள் வெவ்வேறு பதிப்பகங்களின் பாடப் புத்தகங்களை வைப்பதன் மூலமாக, ஏறத்தாழ எல்லாப் பதிப்பகங்களின் புத்தகங்களுக்கும் ஆதரவு கிடைக்கும். சில குறிப்பிட்ட பதிப்பகங்கள் மட்டுமே தனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆதரவு அளிக்கப்படுகிற நிலை இருக்க முடியாது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள கல்வி அபிவிருத்திக் கவுன்சில்களின் எண்ணிக்கை இருபது அல்லது இருபத்தைந்துதான் இருக்கக்கூடும். பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இந்தக் கல்வி அபிவிருத்திக் கவுன்சில்களுக்குத் தரப்படுமானால், மிகச் சில பதிப்பகங்களின் புத்தகங்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலைமையே உருவாகும். ஏராளமான பதிப்பகங்கள் ஆதரவு அளிக்கப்படாமல் சில பதிப்பகங்கள் மட்டுமே ஆதரவு அளிக்கப்படுகிற நிலைமையால் இச் சில பதிப்பகங்களின் ஏகபோக ஆதிக்க நிலைமை வளர்ந்து பெருகும். ஏனைய சிறு சிறு பதிப்பகங்களை அழித்துவிடும் அளவுக்கு இவை ஆற்றல் மிக்கனவாக ஓங்கி உயர்ந்துவிடும். பல்வேறு வகையான பதிப்பகங்கள் தொடர்ந்து இருந்தால்தான் ஒவ்வொரு வகுப்பின் ஒவ்வொரு பாடத்திற்கும் பல்வேறு ஆசிரியர்களால் பல்வேறு நூல்கள் வெளியிடப்படமுடியும். அப்போதுதான் பல்வேறு ஆசிரியர்களின் வெவ்வேறு வகையான அறிவாற்றல்களால் கிடைக்கக்கூடிய முழுப் பயனையும் கல்வித் துறையானது பெற்று வளர முடியும். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், பாடப்புத்தகங்களைப் பஞ்சாயத்து யூனியன் தேர்ந்தெடுப்பதே பொருத்தமான ஏற்பாடாக இருப்பதை உணரலாம்.

கல்வி அபிவிருத்திக் கவின்சில்களில் எம். எல். ஏக்கள், எம். எல். சிக்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் முதலியோர் இடம் பெற்றிருப்பதால், அந்தக் கவுன்சில்களால் பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது, அத்தேர்ந்தெடுப்பில் அரசியல் கட்சிக் கண்ணோட்டமும் அரசியல் துறைச் செல்வாக்கும் இடம் பெற்றுவிடுவது இயற்கை. இந்த நிலைமையில் எந்தப் புத்தகங்களுக்கு எந்த அரசியல் தலைவர்களின் சிபார்சு இருக்கிறது என்பதுதான் முதல் இடம் பெறுமே தவிரப் புத்தகங்களின் தகுதியைப்பற்றி ஆய்ந்து அறிந்து அந்த அடிப்படையில் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கிற உயர்நிலை உருவாக முடியாது. ஒவ்வொரு கல்வி அபிவிருத்திக் கவுன்சிலாலும் தேர்ந்தெடுக்கப்படுகிற புத்தகங்கள் ஏராளமான பள்ளிக்கூடங்களில் வைக்கப்படும். எனவே அப் புத்தகப் பதிப்பாளர்களுக்குத் தாராள

மான அளவில் இடம் கிடைக்கும். இத்தகைய சூழ்நிலையில், புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில், பணநாதனின் திருவிளையாடல் பெரும்பங்கு வகிக்கும் என்பதையும் நாம் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

சுருக்கமாகச் சொல்வதானால், பஞ்சாயத்து யூனியன்களால் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் கல்வி அபிவிருத்திக் கவுன்சில்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற புதிய நிலையால்,

பஞ்சாயத்து யூனியன்களின் ஜனநாயக ஆற்றல் வீணாகிறது.

அந்தந்த வட்டாரத்திற்கு ஏற்ற பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாது போகிறது.

புத்தகத் தேர்ந்தெடுப்பில் அரசியல் செல்வாக்கும் இலஞ்சத்தின் கோரத் தாண்டவமும் குறுக்கிடுகின்றன.

ஒரு சில பதிப்பகங்களின் ஏகபோக ஆதிக்கம் வளர்கிறது.

பல்வேறு புத்தக ஆசிரியர்களின் திறமை வீணாகிறது.

பள்ளிக்கூடங்களை நிர்வாகம் செய்பவர் ஒரு சாரார், புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பவர் வேறொரு சாரார் என்கிற விபரீத நிலைமை உருவாகிறது.

இத்தனைக் கோளாறுகளையும் உண்டாக்கும் புதிய ஏற்பாட்டுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டுப் பழையபடி பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் தருவதுதான் ஆரம்பக்கல்வியின் சீரான வளர்ச்சிக்கும், ஜனநாயகக் கோட்பாட்டின் ஒழுங்கான முன்னேற்றத்திற்கும் பெருந்துணை புரியக்கூடிய பொன்னான ஏற்பாடாகும். பஞ்சாயத்து யூனியன்களால் பாடநூற்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஏற்பாட்டிலும், நடைமுறையில், சிற்சில தவறுகள் அல்லது கோளாறுகள் ஏற்படக்கூடும். அத்தகைய தவறுகள் ஏற்படும்போது தக்க முறைகளால் அவற்றைத் திருத்திவிடமுடியும். ஆனால் அடிப்படைக் கொள்கையைப் பொறுத்த அளவில், பாடநூல் தேர்ந்தெடுப்பு உரிமை, பஞ்சாயத்து யூனியன்களிடம் இருப்பதுதான் நியாயம் என்பதை, இந்தப் பிரச்சினையை ஆற அமர இருந்து அலசி ஆராய்ந்து பார்க்கும் நல்லறிவாளர்கள் யாரும் மறுக்கமுடியாது.

பள்ளிக்கூடங்களை நிர்வாகம் செய்யும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கிறது. எனவே பாடநூற்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அவர்களிடமே இருக்கட்டும்.

58 வரையில் சரிதான்! ஆனால் 35?

ஆரம்ப ஆசிரியர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்தியிருப்பதாகத் தமிழ்நாட்டு அரசாங்கம் அண்மையில் அறிவித்திருக்கிறது.

இந்த அறிவிப்பை நாம் மனமார வரவேற்கிறோம்.

இத்தகைய அறிவிப்பை வெளியிட்டதற்காகத் தமிழக ஆட்சியாளர்களுக்கு நம்முடைய உள்ளம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

55 வயதடைகிற ஆசிரியர்கள், போதுமான உடல்வன்மை உடையவர்களாக இருப்பார்களானால் அவர்கள் மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியப் பணி புரிவதால் கல்வி உலகத்திற்கும் மாணவ மணிகளுக்கும் தமிழ் நாட்டின் எதிர்காலத்திற்கும் பல வகைகளிலும் நன்மைதான் உண்டாகுமே தவிர இழப்பு எதுவும் ஏற்பட்டுவிடாது.

55 வயதடைகிற ஆசிரியர்கள் நீண்ட பல ஆண்டுகள் கல்விப் பயிற்சியை அளித்து அளித்து, அந்தத் துறையில், ஆழ்ந்த அனுபவமும் முதிர்ந்த தேர்ச்சியும் பெற்றவர்களாக இருக்கிறார்கள். சின்னஞ்சிறு பிள்ளைகளின் உள்ளங்களில் எளிதில் பதியத்தக்க வண்ணம் கல்வியை அளிப்பது எவ்வாறு என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய அரிய தொண்டு மேலும் சில ஆண்டுகள் கல்வி உலகத்திற்குக் கிடைப்பது, மாணவ மணிகளின் நற்பேறு என்றே கூறவேண்டும்.

55ஐ 58 ஆக உயர்த்தியுள்ள உத்தரவை, சிறந்தது – சீர்மிக்கது – செம்மையானது – செந்தமிழகத்திற்கு நன்மை தரத்தக்கது என்று கூறி வரவேற்கும் அதே நேரத்தில், அரசாங்கத்தார் சென்ற ஆண்டில் பிறப்பித்த வேறோர் ஆணை காரணமாகத் தமிழ்நாட்டு ஆரம்பப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள விபரீதமான நிலைமையைச் சுட்டிக்காட்டவேண்டியதும் நம்முடைய கடமையாக அமைகிறது.

பள்ளிக்கு வருகிற மாணவர்களின் எண்ணிக்கை 35 முடிந்தால் தான் ஒரு புதிய ஆசிரியரை நியமிக்கலாம் என்று அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்தரவைத்தான் நாம் குறிப்பிடுகிறோம்.

இந்த உத்தரவின்படி சராசரி மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆக இருக்கும் ஒரு பள்ளிக்கூடம், மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆக ஆனால் ஒரு புதிய ஆசிரியரை நியமிக்க முடியாது; 50 ஆக உயர்ந்தாலும் நியமிக்க முடியாது; 55 அல்லது 60 அல்லது 65 ஆக ஆனாலும் நியமிக்க முடியாது. 69 ஆக உயர்ந்தால்கூட நியமிக்க

முடியாது. அந்த எண்ணிக்கை 70 ஆக ஆனால்தான் இரண்டாவது ஆசிரியரை நியமிக்கமுடியும். அதுபோலவே மாணவர்களின் எண்ணிக்கை 105 முடிந்தால்தான் மூன்றாவது ஆசிரியரை நியமிக்க முடியும்.

பிள்ளைகளின் வருகை எண்ணிக்கை 69 ஆக இருக்கும் வரை ஒரே ஆசிரியர்தாம் இருக்கமுடியும் என்றால் கல்வியின் தரம் எந்த அளவு பாதிக்கப்படும் என்பதை நாம் எடுத்துக்கூறவேண்டிய தேவையே இல்லை. பிள்ளைகளின் எண்ணிக்கை 69 ஆக இருக்கும்போது, அவர்கள் அத்தனை பேரையும் தனித்தனியே கவனித்து, அவரவர்களுடைய ஆற்றல்களையும், கல்விப் பயிற்சியை ஏற்றுக்கொள்கிற தன்மைகளையும் கண்டறிந்து, அவரவர்களுக்குக் கல்வி புகட்டுவது என்பது ஒரு நாளும் நடவாத செயலாகும். காலை முதல் மாலை வரை ஒரே இடத்தில் பிள்ளைகளை மடக்கிவைத்து, ஏதோ ஒரு வகைக் கல்வியை அவர்களுக்குக் கொடுத்து, என்னவோ நாமும் பணியாற்றினோம் என்கிற முறையில்தான் ஆசிரியர்கள் தொண்டாற்ற முடியும்.

அதுமட்டும் அல்ல.

இந்த உத்தரவின் காரணமாகப் புதிய ஆசிரியர்களை நியமிக்க முடியாது. பள்ளிக்கூடங்களில் ஏற்கெனவே உள்ள ஆசிரியர்கள் 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்னும் வீதத்தில் நியமிக்கப்பட்டிருப்பதால், அந்த ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் 35 மாணவர்கள் வீதம் மாணவர்களின் எண்ணிக்கை உயரும் வரை எந்தப் பள்ளிக்கூடமும் புதிய ஆசிரியரை நியமிக்க முடியாது. சுருக்கமாகச் சொல்வதானால், அந்த்த சில ஆண்டுகளுக்கு, ஏற்கெனவே உள்ள பள்ளிக்கூடங்கள் புதிய ஆசிரியர்களை நியமிக்கவே முடியாது.

ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயது 55 லிருந்து 58 ஆக உயர்வதாலும் புதிய ஆசிரியர்களுக்கு வேலையில்லாமற் போகிறது. மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதம் 20க்கு 1 என்பது 3 க்கு 1 என்று உயர்வதாலும் புதிய ஆசிரியர்களின் வேலை வாய்ப்புகள் பறிபோகின்றன.

ஆனால் நாட்டிலோ ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் புதிது புதிதாக முளைத்தபடி இருக்கின்றன. இந்தப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களிலிருந்து, ஆண்டுதோறும், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் அணி அணியாக வெளிவந்தபடி இருக்கிறார்கள். வெளியே வந்ததும் கல்வி உலகம் தங்களை ஆசையோடு வரவேற்று, அன்போடு ஏற்று, ஆர்வத்தோடு பணி புரிவதற்கான அரிய வாய்ப்பை உடனடியாக அளித்து மகிழும் என்னும் நம்பிக்கை நிறைந்த நெஞ்சத்தோடு வெளியே வருகிறார்கள்.

ஆனால் அந்த நம்பிக்கை நிறைவேற முடிகிறதா ?

எப்படி முடியும் ?

55, 58 ஆக உயர்கிற உத்தரவு ஒரு புறம்! 20, 35 ஆக மாறுகிற ஆணை வேறு ஒரு புறம் ! இந்த இரண்டு இடிகளுக்கு இடையே சிக்கிய மத்தளமாக அல்லவா ஆகிறார் ஆசிரியப் பணியை நாடி ஆவலுடன் ஓடி வரும் இளைஞர் !

மத்தளம் இடிபட்டால் இன்னிசை எழுகிறது. ஆகவே அந்த இடிகளை வரவேற்கலாம். ஆனால் ஆசிரியராக வர விழைபவர் இடிபட்டால், தாங்க முடியாத வேதனையல்லவா ஏற்படுகிறது, அவருக்கும், நாட்டுக்கும்! வேதனையை அளிக்கின்ற இந்த விபரீத நிலைமையை எப்படி ஏற்க முடியும் ?

அரசாங்கத்தின் உத்தரவுகள் இரண்டுமாக இணைந்து, ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டதைதை ஓங்கி வளரச்செய்கின்றன.

இந்தக் கொடுமையைத் தடுக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் ?

55 ஐ 58 ஆக உயர்த்துகிற உத்தரவைத் திரும்பப் பெற்றுவிடலாமா ? கூடாது. அந்த உத்தரவு, நாட்டுக்குத தேவையான நல்ல உத்தரவு; கல்விப் பயிற்சியின் தரத்தை உயர்த்தவல்ல பொன்னான உத்தரவு.

அப்படியானால் என்னதான் செய்வது ?

யாரும் கேட்பர் இப்படி !

செய்ய வேண்டிய செயல் இதுதான் ! 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்னும் விகிதத்தைப் பழையபடி 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று திருத்தியமைக்க வேண்டும்.

இப்படிச் செய்தால்தான் கல்விப் பயிற்சியின் தரமும் உயரும்; ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களின் வேலையில்லாக் கொடுமையும் குறையும்.

ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயது 55 லிருந்து 58 ஆக உயர்கிற அதே நேரத்தில் ஆசிரிய மாணவ விகிதம் 35 லிருந்து 20 ஆகக் குறைந்துவிடுமானால், தமிழ்நாட்டுக் கல்வி உலகம் தனிச் சிறப்பு எய்தும்.

அந்தச் சிறப்பைத் தமிழகத்திற்குப் பெற்றுத்தரவேண்டும் தமிழ்நாட்டு அரசாங்கம்.

இது, நம்முடைய ஆவல்; முற்றிலும் நியாயமான ஆவல்.

ஆவல் நிறைவேறுமா ?

ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளே!
ஆசிரியப் பெருமக்களே!

உங்கள் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள்!

அன்றலர்ந்த செந்தாமரைகள் என விளங்கும் சின்னஞ்சிறுவர்களின் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்களை விதைத்து அவர்களை அறிவும் ஆற்றலும் மிக்க குடிமக்களாக மாற்றி அமைக்கும் மாண்புமிகுந்த பணியாற்றிவரும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களே! ஆசிரியர்களின் அரும்பணியைத் தக்க முறையிலும் சீரான வகையிலும் பயன்படுத்திக் கல்வி நீரோடையை நாடெங்கும் பாயவிடும் நற்பணியை ஆற்றிவரும் தொடக்கப்பள்ளி நிர்வாகிகளே! உங்கள் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள்!

உங்களுடைய அன்பு இதழாகிய "**ஆரம்பக் கல்வி.**" ஏடானது சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக ஆற்றி வருகிற சிறந்த பணியை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்தக் கால் நூற்றாண்டுக் காலத்தில், "**ஆரம்பக் கல்வி**" இதழானது, உங்களுடைய உரிமைக் குரலாகவும் எழுச்சி முரசமாகவும் இதய கீதமாகவும் ஒளி வீசித் திகழ்ந்து உங்களுடைய குறைகளையெல்லாம் களைந்தெறியும் நற்பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டுவந்திருக்கிறது உங்களுடைய பள்ளி வாழ்க்கையில் ஓயாத துன்பங்களும் தொல்லைகளும் ஏற்பட்ட நேரத்தில் அந்தத் துன்பங்களையும் தொல்லைகளையும் எதிர்த்து ஒழிப்பதையே தன்னுடைய தனிப்பெருந் தொண்டாகக் கருதி நல்வினை ஆற்றியிருக்கிறது. ஆட்சியாளர்களின் அலட்சியப் பார்வையால் அல்லது ஆகாத திட்டங்களால் உங்களுக்கு இடையூறுகள் ஏற்பட்ட வேளைகளில் அந்த இடையூறுகளைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூள் ஆக்குவதில் தன் ஆற்றல் முழுவதையும் செலவிட்டிருக்கிறது.

தான் தோற்றம் எடுத்த அந்த நாள் முதல் இந்த நாள் வரை, "**ஆரம்பக் கல்வி**" இதழானது, உங்கள் உயர்வையே தன் உயர்வாக எண்ணி, உங்கள் சிறப்பையே தன் சிறப்பாகக் கருதி, உங்கள் செழிப்பையே தன் செழிப்பாக ஏற்று, உங்கள் நன்மையையே தன் நன்மையாக நினைத்து ஓய்வு ஒழிவு இன்றி உங்களை முன்னேற்றுவதற்கான நற்பணியிலேயே தன்னை ஒப்படைத்து விட்டிருக்கிறது. உங்களில் பலர் கடிதம் மூலமாகவும் நேரிலேயும் தெரிவித்திருப்பதைப் போல, இந்த ஏடானது, உங்களுடைய தோழனாய்த் தொண்டனாய் வழிகாட்டியாய் விளங்கி வந்திருக்கிறது. இந்த அளவுக்குத் தொடர்ச்சியாகவும் செம்மையாகவும் அஞ்சாத நெஞ்சத்தோடும்

அசையாத உறுதியோடும் இருபத்தி ஐந்து ஆண்டுகளாக ஆரம்ப ஆசிரியர்கள்—ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் ஆகியோரின் நல்வாழ்வுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றி வரும் இதழ் வேறு எதுவும் இல்லை என்பது நாடறிந்த உண்மை.

இத்தகைய சீரும் சிறப்பும் படைத்த இந்த இதழ் எழிலோடும் ஏற்றத்தோடும் தொடர்ந்து நடைபெற்று வருவதற்காக இந்த இதழின் அலுவலகத்தால், பல ஆண்டுகளாக, அசோசியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ் என்னும் அமைப்பின் பெயரால், ஆரம்பப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உரிய பாடப்புத்தகங்கள் பல வெளியிடப்பட்டு வருவதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தப் புத்தகங்களை உங்களிற் பலர் கடந்த பல ஆண்டுகளில் உங்களுடைய பள்ளிக்கூடங்களில் பெரு மகிழ்ச்சியுடன் வைத்து ஆதரித்து, நீங்களும் மகிழ்ச்சியுற்று எங்களுக்கும் மகிழ்ச்சியை அளித்தீர்கள். இத்தனை ஆண்டுகளாக எங்கள் பாடப்புத்தகங்களை உங்கள் பள்ளிக்கூடங்களில் ஏற்று ஆதரவு தந்ததன் வாயிலாக "ஆரம்பக் கல்வி" யின் வளர்ச்சிக்கு நீங்கள் அளித்துள்ள நல்லுதவிக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றி என்றும் உரியது ஆகும்.

இத்தனை ஆண்டுகளாக நீங்கள் உங்கள் பள்ளிக்கூடங்களில் எங்கள் பாடப்புத்தகங்களை வைத்து ஆதரித்ததுபோலவே இந்த ஆண்டிலும் எங்கள் புத்தகங்களை வைத்துப் பேராதரவு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். "ஆரம்பக் கல்வி" இதழானது ஓங்கி வளர்வதற்காகவும், அதன் தொண்டு மேலும் சிறந்து பொலிவதற்காகவும், "ஆரம்பக் கல்வி" அலுவலகத்தால் வெளியிடப்படும் பாடப்புத்தகங்களை ஏற்று ஆதரிக்க வேண்டியது உங்களுடைய கடமை என்பதை நாங்கள் சொல்லவா வேண்டும்?

எங்கள் பாடப்புத்தகங்களை ஆதரியுங்கள். அப்படி ஆதரிப்பதன் வாயிலாக "ஆரம்பக் கல்வி"க்குப் புது வலிவு ஊட்டுங்கள் என்று மீண்டும் மீண்டும் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்

PROCEEDINGS OF THE D. P. I. MADRAS-6.

R. Dis. 1827/63 - dated 15-3-63.

அரசாங்க உத்தரவு M. S. No. 48 நாள் 8-1-63 H. O. Ms. No. 1545 நாள் 23-12-63 இந்த உத்தரவின்படி நமது நாட்டின் நெருக்கடி நிலைமையின் காரணத்தையொட்டித் தேசிய பாதுகாப்புக்காக மாதம் ரூ. 100க்குக் குறைந்த வருமானமுள்ளவர்கள் 3 சதவீதமும் ரூ. 100-க்கு அதிகமானவர்கள் 5 சதவீதமும் கட்டாய சேமிப்பு நிதியின்கீழ் மாதந்தோறும் தங்களால் கட்டப்பட்டுவரும் பிராவிடெண்ட் பண்டு கணக்குடன் சேர்த்து 1963 ஜனவரி மாத முதல் செலுத்தப்படவேண்டும். இந்தக் கணக்கு பிராவிடெண்ட் பண்டு கணக்குடன் சேராது.

(Sd) K. சீனிவாசன்.

Secretary. of Government.

PROCEEDING OF THE D.P. I. MADRAS-6.

R. C. No. 4661 - B 7/61 Dated 8-2-63.

பொருள் :— நான்காம் வகுப்பில் ஆங்கிலம் போதிக்க செகண்டரி கிரேட் ஆசிரியர் நியமனம்.

அரசாங்க உத்தரவு M. S. No. 1192 நாள் 22-5-62 இதன் படி நான்காம் வகுப்புக்கு ஆங்கிலப்பாடம் 1962-63 ஆண்டிலிருந்து போதிக்கப்பட்டு வருகின்றது. நான்காவது வகுப்பு வரையுள்ள பூர்த்தியடையாத ஆரம்பப் பள்ளிக்கு ஆங்கிலம் போதிக்க சராசரி மாணவர் வருகை 35க்கு குறையாமலிருந்தால் புதியதாக செகண்டரி கிரேட் ஆசிரியர் நியமனம் செய்து கொள்ளலாம்.

(Sd) K. சீனிவாசன்

Secretary of Government

PROCEEDING OF THE D.P.I. MADRAS-6.

R. C. No. 407 E 2/63, Dated 11-3-63.

அரசாங்க உத்தரவு M. S. No. 274 தேதி 12-2-63 இதன் படி ஆரம்பப்பள்ளி, உயர்தரப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுவந்துள்ள விருப்ப விடுமுறை (Optional Holidays) உடனடியாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

V. T TITUS.
for D.P.I.

பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பாடசாலை களுக்குப் பாடப் புத்தகங்கள்

பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை களுக்கு, 1963-64 முதல் பாடப் புத்தகங்களை (Standing Committee Education District Development Council) ஜில்லா அபிவிருத்தி சபையில் ஏற்படுத்தியுள்ள கல்விக்குழு அங்கத்தினர் களால் தேர்ந்தெடுத்து வைக்கப்படும் என்று அரசாங்கத்தார் புதிய உத்தரவு G. O. வெளியிட்டிருக்கிறார்கள்.

குறிப்பு :- இதுவரை நமது மாகாணத்திலுள்ள 375 பஞ்சாயத்து யூனியன்களால் நிர்வாகம் நடத்திவரும் ஆரம்பப்பாடசாலை களுக்கு, யூனியன்களில் அமைந்துள்ள கல்விக்குழு (Education Committee) அங்கத்தினர்களால் பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுக் கப்பட்டன. இந்த அதிகாரம் ஜில்லா அபிவிருத்தி சபை, கல்விக் குழுக்கு அரசாங்கத்தாரால் மாற்றப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 2 சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின் றன. அந்தச் சபைகளில் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், சட்டசபை அங்கத்தினர்கள் (M.L.A.), மேல் சபை அங்கத்தினர்கள் (M.L.C.) அங்கம் வகிக்கின்றனர்.

NEW GOVERNMENT DIRECTIVE ON TEXTBOOKS

By a Staff Reporter

Mail, Madras, Dated 25-4-'63.

MADRAS Apr. 25: The Government has directed that from the school year 1963-64 textbooks for all the panchayat union schools in all the Unions within a development district should be prescribed in common by the Standing committee on Education of the concerned District Development Council.

The Collectors of all Districts other than Madras and Kanyakumari have been requested to take action to implement the above order.

கல்வி முறை பற்றி ராஜாஜி கருத்து

"பிள்ளைகளுக்குப் பொருளை அறியும் அனுபவம் முக்கியம்"

வெறும் உருவத்தைக் காட்டும் போதனாமுறை தீங்கிழைக்கும்

கேரளத் தலைமை ஆசிரியர்கள் மாநாட்டில் உரை

திருவனந்தபுரம், மே. 18—கல்வி போதனைக்கான விஷயம், முறை இரண்டையும் நிர்ணயிப்பதற்கான சுதந்திரம் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு இருக்க வேண்டுமென்று ஸ்ரீ இராஜகோபாலாச்சாரி இங்குக் கூறினார். கேரளத் (Private Schools) தனியார் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்மேளனத்தின் பூர்த்தி விழாவுக்குத் தலைமை வகித்து ராஜாஜி பேசினார்.

அரசியல் துறையைப் போலவே கல்வித் துறையிலும் சுதந்திரம் இருக்க வேண்டுமென்று தாம் விரும்புவதாகக் கூறிவிட்டு ராஜாஜி மேலும் தெரிவித்த கருத்துக்கள் பின் வருமாறு:—

நாம் கவனித்துக் கொண்டிருக்கும் பல்வேறு விஷயங்களுக்குள் கல்வி சம்பந்தமாகத்தான் மிகவும் தவறான மாயக் கருத்துக்களையும் தவறான பிரமைகளையும் கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது.

இப்போது பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு 'அடையாள டிரில்' நடக்கிறது; இது குழந்தைகளுக்கு மிகத் தீங்கு ஆகும். நமது குழந்தைகள் பிறவியிலேயே நல்லறிவு படைத்தவர்கள்; நமது மக்களுக்கு நல்ல அறிவு உண்டு. ஆனால் இப் பிறவி அறிவையெல்லாம் பள்ளிக்கூடங்களில் நடத்தும் ஓய்வில்லாத முயற்சிகளினால் குறைத்து விடுகிறோம்.

போதனா முறை பற்றிய விதிகள் ஒழுங்குபாடுகள் குறித்து இலாகாவிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளைக் குறிப்பிட்டு, ராஜாஜி கூறியதாவது:—

அரசாங்கத்துக்கு மட்டுமே அறிவுண்டு என்றும் மக்களெல்லாம் வெறும் பாளையப்பட்டுகளென்ற பிரமையின் விளைவாகப் பிறந்தவை இந்த விதிகளும், ஒழுங்கு முறைகளும். "விவேமுள்ள" சர்க்கார் பாளையப்பட்டாக மக்களை மாற்ற வேண்டுமென்று முயல்வதால் இத்தகைய கட்டுப்பாடுகள் வருகின்றன.

கல்வியும் வருங்காலமும்

நமது சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் நாம் எத்தகைய கல்வி புகட்டுகிறோமோ அதற்

தேற்ப நாட்டின் வருங்காலம் அமையும். ஆகையால் எந்தக் கல்வி புகட்டுகிறோம், என்னென்ன விஷயங்களைப் புகட்டுகிறோமென்பதெல்லாம் மிகவும் முக்கியமாகும். என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நீண்ட அனுபவத்திலிருந்து கல்வித் துறையில்தான் நாம் மாயக் கருத்துக்களையும், தவறான முறைகளையும் மிகவும் அதிகமாகப் பின்பற்றுகிறோமென்று தோன்றுகிறது.

பள்ளிக்கூடம் போகாத அறிவுள்ள மனிதர்கள் ஏதாவதொரு கலைத் தொழிலிலோ அல்லது யந்திரத் தொழிலிலோ, ஈடுபட்டு பள்ளிக்கூடம் அல்லது கல்லூரிகளிலிருந்து தேறிவரும் பிள்ளைகளைக் காட்டிலும் கல்வி அறிவுள்ளவர்களாக இருப்பதை என் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். இதற்குக் காரணமென்ன? பள்ளிக்கூடங்களில் நாம் அசல் பொருள்களுக்குப் பதிலாக அதன் ஜாடைகளில் தான் அதிக கவனம் செலுத்துகிறோம். ஒரு பொருளைக் குறிக்கும் அடையாளத்தைவிட, அப்பொருள் முற்றிலும் மாறுபட்டதாகும். உதாரணமாக, யானையின் உருவப் படத்துக்கும் அசல் யானைக்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது. உருவப்படத்துக்கும் அதைக் குறிக்கும் வார்த்தைக்கும் வித்தியாசமிருக்கிறது. இளம் வயது முதற் கொண்டு பதினைந்து அல்லது இருபது வயது வரை பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலேயே இருந்து விடுகிறார்கள்; அவர்கள் வெறும் வார்த்தைகளையும், அந்த வார்த்தைக்கான எழுத்துக்களையும் மட்டுமே தெரிந்து கொள்கிறார்கள். அந்த வார்த்தைக்கான பொருளைத் தெரிந்து கொள்வதற்கு அதிகபட்சம் படத்தைத் தான் கொடுக்க முடிகிறது; பொருளை நேரில் தெரிந்து கொண்டு பிள்ளைகள் வளர்ச்சியடைவதற்கு வழியில்லை.

குழந்தைகள் இதைத் தெரிந்து கொள்ள முயலும்போது, அதைக் கண்டிக்கிறோம். விளையாடும் போதும் போய் எழுது, படி என்று அதட்டுகிறோம். பொருள்களை நேரில் அனுபவத்தில் தெரிந்து கொள்ளப் பழக்கபபடுத்துவதில்லை. அதனால்தான் வெறும் அடையாளங்களையன்றி, அசல் பொருள்களில் அனுபவமுள்ள பள்ளிக்கூடம் போகாத மனிதன் அதிகக் கல்வி அறிவுள்ளவனாக இருக்கிறான்.

உயர்தர கணிதம் அல்லது பௌதிகத்துக்கு அடையாளக் குறிகள் முக்கியமே. ஆனால் சாதாரண வாழ்க்கைக்கு அது போதாது. ஆகையால் இதுதான் பெருங்குறை. மற்ற நாடுகளும் இதைத்தான் பின்பற்றுவதாகச் சுட்டிக்காட்டலாம். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் வாழ்க்கை ஒவ்வொரு விதம். ஆகையால் இந்த அடையாளக் குறிகவாத்து குழந்தைகளுக்கு மிகவும் தீங்கிழைப்பதாகும்.

ராஜாஜி மேலும் பேசுகையில் கூறியதின் சாராம்சம் பின்வருமாறு:—

என்ன செய்ய வேண்டுமென்பதைத் தலைமை ஆசிரியர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் கல்வி இலாகா விதிகளை வகுத்து, முறையை நிர்ணயிக்கிறது. ராஜ்பத்தின் அதிகாரங்களை யெல்லாம் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்கிறது. ராஜ்ய சர்க்கார்பள்ளி நிர்வாகத்தின் அதிகாரத்தையெல்லாம்எடுத்துக் கொள்கிறது. நிர்வாகத்தினர் தலைமை ஆசிரியர்களின் அதிகாரத்தை யெல்லாம் மேற்கொண்டு விடுகிறார்கள். ஆனால் எல்லா அதிகாரமும், பொறுப்பும் தலைமை ஆசிரியர்களுக்கே இருக்க வேண்டும்.

நாசூக்கான புரட்சி

இதனால்தான் தலைமை ஆசிரியர்கள் இன்று மாநாடு கூடியிருக்கிறார்கள். இதுவே ஒரு விதத்தில் நாசூக்கான புரட்சி போன்றது. தங்களுடைய முழுப் பொறுப்பையும் அவர்கள் பெற வேண்டும். தலைமையாசிரியர்கள்தாம் நாட்டின் முக்கியமான பிரஜைகள். இதை அனுபவத்தில் உணர்ந்து சொல்கிறேன். நாட்டுக்கு ஏதாவது நல்ல வருங்காலம் உண்டெனில் ஒழுக்கக் குறைவு, ஊழல்களில் வெறுப்புண்டாகி, புது வாழ்க்கை உண்டாக வேண்டுமெனில், தலைமை ஆசிரியர்கள் தங்களுடைய உரிமைகளையும், பொறுப்புகளையும் உணர வேண்டும். கல்விச்சாலைகள் மீது முழு அதிகாரமும் அவர்கள் கையில் வரவேண்டும். பொதுவான தரம் அமையும் விதத்தில் சர்க்கார் குறைந்த பட்ச விதிகளை வகுத்துக்கொடுத்தால் போதுமானது.

நல்லன யாவையும் கட்டாயக் கல்வி முறையில் புகுத்தப்பட வேண்டு மென்று கருதப்படுகிறது. இது தப்பு. இவ்விதம் அளவு மீறி 'டிரில்' வாங்கினால் குழந்தைகளுக்கு அக்கறை குறைந்துவிடும். குறைந்த பட்ச அளவுக்கே கட்டாய அம்சம் இருக்கவேண்டும். மற்றவற்றைத் தலைமை ஆசிரியர்களின் யுக்தானுசாரத்துக்கு விட்டுவிட வேண்டும்.

அவரை வரவேற்ற தலைவர் "ராஜாஜி கிளர்ச்சிக்காரர், நிர்வாகஸ்தர், நூலாசிரியர், கல்விமான், பேச்சாளர், ராஜதந்திரி" என்றெல்லாம் வர்ணித்ததைக் குறிப்பிட்டு "நான் வேறு எது இருந்தாலும், இல்லாவிட்டாலும் கிளர்ச்சிக்காரர்தான். கிளர்ச்சி அவசியமென்று காண்கிறேன். கிளர்ச்சியின்றி முன்னேற்றமில்லை. நம்முடைய ஜீவாதார உரிமையான பெரும்பகுதி சுதந்திரத்தை இழந்து விட்டோம்," என்று ராஜாஜி கூறினார்.

சரி விகித உணவு

(டாக்டர் எஸ். பி. ஒயிட்ஹெட்)

நமது உணவுக்குத் தக்கபடியே நமது உடலும் அமையும் என்பது உண்மையான வசனம். நமது உடல் மட்டும் அல்ல, நமது புத்தி சக்திகளும் கூட அதைப் பொறுத்தே இருக்கும். போஷணையைப் பற்றிய புதிய உண்மைகள் வெளியாக ஆக, பரிபூரண ஆரோக்கியத்திற்கு நாம் உண்ணும் உணவே காரணம் என்பது தெரிய வருகிறது.

ஒரு கர்ப்பிணியான ஸ்திரீக்குப் போதிய அளவு பாலும் காய்கறிகளும் பழங்களும் கிடைக்காவிட்டால், அவள் வயிற்றில் இருக்கும் சிசுவுக்குப் பிறந்த பின் நல்ல பல் முளைக்காது என்பது ஒரு பிரத்தியட்ச உண்மை. வயது வந்த ஒரு பெண் பச்சைக் காய்கறிகளும், முழுத் தானியமும், உலர்ந்த பழங்களும், முட்டையும், இன்னும் அயச் சத்துள்ள உணவுகளும் மிகவும் குறைத்து உண்டால், அவளுக்குச் சோகை தோன்றக் காரணமாகும்.

தொந்தி வயிறு, சப்பைக் கால், பாண்டு பிடித்த சருமம், இவையெல்லாம் சத்தில்லாப் போஷணையின் குற்றமே. கணை, சொறி, பெரிபெரி முதலியவை தோன்றுவதற்குக் காரணம் உணவில் சில வைட்டமின்கள் இல்லாமையே.

க்ஷயரோகம், வாத ஜுரம் இவற்றை எதிர்த்துவெல்லுவதற்கான சக்தியை உடல்பெற்றுக்கொள்ள அதற்குச் சரியான உணவுத் திட்டம் அவசியம். வைட்டமின் பி சத்து அதிகமாக உள்ள உணவைப் பெறும் குழந்தைகள் அவ்விதம் பெறாதவர்களைவிட அறிவுள்ளவைகளாகவும், நுட்பங்களைச் சீக்கிரம் கிரகித்துக்கொள்ளக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. ஆனால் சிறுணவு கொள்ளப் பெறாமலிருந்தால், உடனே நோய்க் குறிகள் தோன்றிவிடும் என்று அல்ல. உணவிலே கொஞ்சம் குறை இருந்தாலும், நாம் பூரண ஆரோக்கியமாய் வாழ்கிறோம் என்று சொல்லிவிட முடியாது.

சரியான உணவு வகைகளைச் சாப்பிடுவது மட்டும் போதாது. ஆனால் ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டிலும் சகல விதச் சத்துக்களும் தக்க அளவிலே அமைந்திருக்கின்றனவா என்றும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சரியான உணவுத் திட்டத்தின் இலட்சணம் ஆரோக்கியத்தை நிலைநிறுத்தவும், உடலைப் போஷிக்கவும் வேண்டும். ஆனால்

உணவு உடலைப் புஷ்டியாக்குவதை விட, அதை ஆரோக்கியமாய் வைத்திருப்பதே முக்கியம். உணவுத் திட்டத்தில் புஷ்டி தரும் பொருளை விட, ஆரோக்கியத்தை வளர்க்கும் பதார்த்தங்களையே அதிகம் சேர்க்க வேண்டும். சில உணவுப் பொருள்கள் ஆரோக்கியத்திற்கும் உடல் போஷணைக்கும் ஏற்ற முறையிலே அமைந்திருந்தாலும், பல உணவுகள் மேலே கூறிய அடங்கியவற்றில் வைட்டமின், தாதுப்பொருள்கள், என்சைம்கள், நீர்ச்சத்து இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். முக்கிய புஷ்டி உணவுகளாவன: புரோட்டீன், கரிநீரகை (மாவுச் சத்தும் சர்க்கரையும்), கொழுப்புச் சத்து. ஒரு சரியான உணவுத் திட்டத்தின் இலட்சணம் இத்தகைய பொருள்கள சரியான முறையில் கலந்திருப்பதே யாகும்.

முக்கிய ஆகார வகைகள்

புரோட்டீன் அதிகமுள்ள உணவு வகை	கரிநீரகை அதிகமுள்ள உணவு வகை	கொழுப்பு அதிகமுள்ள உணவு வகை	சமனப்படுத்தும் உணவுச் சத்துகள்
பாலாடைக் கட்டி	முழுத் தானியங்கள்	வெண்ணெய்	பால்
முட்டை	கோதுமை ரொட்டி	பாலாடை	பழங்கள்
பால்	சர்க்கரை	பால்	உலர்ந்த பழங்கள்
கொட்டை	தேன்	ஆலிவ்ஸ்	காய்கறிகள்
பயறு வகைகள்	உலர்ந்த பழங்கள்	முட்டைமஞ்சட்கரு	கீரை வகைகள்
மீன்	பழங்கள்	நிலக்கடலை	
மாமிசம்	உருளைக்கிழங்கு	எண்ணெய் வகைகள்	
	கிழங்கு வகைகள்	வனஸ்பதி.	

இரண்டு வகை வேலைகளில் ஒன்றைத் தான் தீவிரமாகச் செய்கின்றன. இப்படி முக்கியத்துவம் வாய்ந்த ஆரோக்கியச் சத்துகள்

இயற்கைப் பொருள்களான தானியங்கள், காய்கறிகள், பழங்கள், கொட்டைகள், பால் பண்டங்கள் எல்லாவற்றிலும் போஷ

லைக்குத் தகுந்த முறையிலும், ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு ஏற்ற முறையிலும் அமைந்திருக்கின்றன.

உணவுப் பொருள்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 1. புரோட்டீன் அதிகமுள்ள உணவு. உடல் அணுக்கள் புத்துயிர் பெறவும ஆற்றல் பெறவும; 2 கரிநீரகைப்பொருள்கள் (சர்க்கரையும் மாவுப்பொருளும் உள்ள உணவு). இவைதாம் சக்தி தரும் உணவுகள்; 3. உடலின் உஷ்ணத்திற்கும் சக்திக்கும் அவசியமாக இருக்கும் கொழுப்புப் பொருள்; 4. ஆரோக்கியத்தைக் காப்பாற்றக் கூடிய உணவுகள்—வைட்டமின்கள், மாக்கூர், நீர் முதலியன.

இத்தகைய பாகுபாட்டை அட்டவணையில் பாருங்கள். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் பொருளை எடுத்துக்கொண்டோமானால், நமது உணவுத் திட்டத்தில் தினசரி புரோட்டீன், கரிநீரகை, கொழுப்பு முதலிய சத்துப் பொருள்கள் பூர்த்தியாகிவிடும்.

நாம் உயிரோடிருக்கும் ஒவ்வொரு நாளிலும் நம் உடம்பில் அழிவு வேலை நடந்துகொண்டே இருக்கிறது. உடல் அணுக்கள் சதா உடைந்துகொண்டும் தேய்ந்துகொண்டும் இருக்கின்றன. எப்போதும் உடல் கூறுகள் செம்மையாகி, புத்துயிர் பெற்று, மீண்டும் மீண்டும் கட்டப்படுகின்றன. எல்லாவித அணுக்களும் ஒன்று போல, அல்லது ஒரே வேகத்தில் அழிவதில்லை. உதாரணமாக, எலும்புகளின் அணுக்கள் மாமிச அணுக்களை விட மெதுவாகவே அழிகின்றன. புதிய உடல் அணுக்கள் கட்டுவதற்கான மூலப் பொருள் நமது உணவு மூலமாகத்தான் வரவேண்டும். உடல் அணுக்களைக் கட்டி வளர்க்கும் இந்தச் சத்துக்களுக்குத்தான் புரோட்டீன் என்று பெயர்.

முதல் தரமான புரோட்டீன் உணவு பிராணிகளின் மூலம் நமக்குக் கிடைக்கிறது: முட்டை, பால், பாலாடைக்கட்டி, மாமிசம் முதலியவை. தாவர உணவுகளில் இருக்கும் புரோட்டீன் சில முக்கிய குறைபாடுகளை உடையவை. ஆகவே மரக்கறி உண்பவன் இந்த விஷயத்தில் புலால் உண்பவனை விடச் சற்று சிரத்தையுடன் தன்னுடைய புரோட்டீன் தேவைக்குத் தக்கபடி உணவுத்திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. முட்டையையும் பால் பண்டங்களையும் சேர்த்துக் கொண்டால், இந்தத் தேவை எளிதில் பூர்த்தியாய்விடுகிறது.

உடல் போதுமான அளவு கொழுப்பைச் சில காலம் பெற்றுக்கொள்ளாமலிருந்தால், சீதோஷ்ண மாற்றத்தில் ஏற்படும் பீடைகளுக்கும் கணக்குறைவுக்கும் இதர நோய்களுக்கும் அது இலக்காகிறது. நோயை எதிர்த்து

(21-ம் பக்கம் பார்க்க)

நாட்டுப் பாதுகாப்பு ... பள்ளிகளின் பங்கு

(என். டி. சுந்தரவடிவேலு, சென்னை ராஜ்ய கல்வி டைரக்டர்)

பள்ளிக்கூடம், நாட்டின் இதயம். அது எங்கோ, அந்தரத்தில் வேலை செய்கிறதா? இல்லை. சமுதாயத்தில் இயங்குகிறது, சமுதாயத்தால் இயக்கப்படுகிறது. அப்படியானால் அது யாருக்காக இயங்க வேண்டும்? சமுதாயத்திற்காக இயங்க வேண்டும்; அதாவது, சமுதாயத்தின் குறிக்கோளுக்குத் துணை நிற்க வேண்டும். சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றவேண்டும். இன்றைய தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். மாறிவரும் எதிர்காலத்தேவைகளையும் நிறைவேற்ற ஆயத்தஞ்செய்ய வேண்டும். இதை நினைவில் கொண்டு பள்ளிக்கூடங்கள் செய்யவேண்டிய, பாதுகாப்பு வேலைகளைப் பற்றிச் சிந்திப்போம்.

சென்ற அக்டோபர் மாதம் 30ஆம் நாள் இந்தியாவைத் திடீரெனத் தாக்கிற்று, சீனா. சில வாரங்களில் வடஎல்லைப் பகுதிகளில் இந்திய மண்ணை ஆக்கிரமித்தது. அதன் விளைவாக, நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டிய நெருக்கடிநேர்ந்துள்ளது. ஆகவே நாடு முழுவதும் வீராவேசத்துடன் பொங்கி எழுந்துள்ளது. இந்திய மண்ணை எவரும் கவர விடமாட்டோம் என்று சூளுரைத்து நிற்கிறது ஒருமுகமாக. நீறு பூத்த நெருப்புப்போல் இருந்த நாட்டுப்பற்று சீன ஆக்கிரமிப்பின் காரணமாக எல்லோர் உள்ளங்களிலும் கொழுந்துவிட்டு எரிகிறது. வரலாறு காணாத அளவில், நாட்டுப்பற்றும், ஒருமைப்பாட்டு உணர்ச்சியும் பெருக்கெடுக்கக் காண்கிறோம். பெரியவர்களிடம் மட்டுமல்ல. சிறுவர்களிடமும் காண்கிறோம். மாணவ மாணவிகளெல்லாம் வீறு கொண்டு எழுந்துள்ளனர். தற்காப்பைப் பலப்படுத்த முயலும் நம் பாரத நாட்டிற்குத் துணை நிற்பது பள்ளிகளின் பொறுப்பு.

இன்றைய விழிப்புணர்ச்சியை மங்காது காத்துக்கொள்ளவேண்டும். நாட்டுப்பற்றை மேலும் போற்றி வளர்க்க வேண்டும். ஒற்றுமை உணர்ச்சியைத் தொடர்ந்து வளர்க்கவேண்டும். இவையே கல்விக்கூடங்களின் கடமையாகும்.

நாட்டின் பாதுகாப்பிற்காக அஞ்சாநெஞ்சம் படைத்த போர் வீரர்கள் தேவையே. தியாகிகள் தேவையே; அவர்களுக்குப் பக்க

பலமாக ஒன்றுபட்டு நிற்கும் கோடானுகோடி நன்மக்களும் தேவையே. அத்தகைய நாட்டுப் பற்றுடைய நன்மக்களை, ஒற்றுமையுணர்ச்சி கொண்ட பெருமக்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு பள்ளிக்கூடங்களையே சார்ந்ததாகும்.

நாட்டைப் பாதுகாக்க நாட்டுப் பற்றும் ஒற்றுமை யுணர்ச்சியும் மட்டுமே போதுமா? எதையும் தாக்குப்பிடிக்கும் திறனும் உடல் வலிவும் இருந்தால் அல்லவா அவர்கள் முழுத் தொண்டாற்ற முடியும்? உடல்வலிவுள்ள மக்களைப் பெறுவது எவ்வாறு? நினைத்தவுடன் பெறமுடியுமா? அவர்களை நாமே உருவாக்க வேண்டும். எப்படி உருவாக்குவது? தக்க பயிற்சியால். பல்லாண்டு தொடர்ந்து பயிற்சி கொடுத்து உருவாக்கவேண்டும். எனவே, உடற்பயிற்சியில் கூடுதலான கவனஞ் செலுத்த வேண்டும். மாணவ, மாணவிகளெல்லாம் போதிய உடற்பயிற்சி பெற்று உடல்வன்மை மிக்கவர்களாக வளரவேண்டும். நம் பையன்களும் பெண்களும் எப்படியிருக்க ஆசைப்படவேண்டும்? எலும்புந் தோலுமாய்க் குச்சிபோலிருக்கவா? அசைந்தாடும் மலர்க்கொடியாக இருக்கவா? இவையெல்லாம் கற்பனைக்கு வேண்டுமானால், சரி. ஆனால் வாழ்க்கைக்கோ? பாரதியார் வேண்டியதுபோல அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டுமாறு உடல் உறுதிவேண்டும். திரு. வி. க. கூறியதுபோல எஃகு நரம்பும், எக்கழுத்தும், தடைபடாக் குருதி ஓட்டமும் உடைய

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

நிற்கும் திறன் குறைந்து கொண்டே வருகிறது. க்ஷய ரோகத்தைப் பொறுத்த மட்டில் இது மிகமிக உண்மை. போதுமான அளவு கொழுப்புச் சத்து இல்லாமை சில சரும நோய்களுக்கும் காரணமாகிறது. உணவில் போதுமான கொழுப்புச் சத்து இல்லாமை விசேஷமாகப் பால பருவத்திலும், வாலிபப் பருவத்திலும், கர்ப்ப காலத்திலும் அதிகத் தீமையைச் செய்யும்.

கொழுப்பின் அளவு அல்ல, அதன் தரமே முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். கொழுப்பின் தரமும் அதிலுள்ள வைட்டமினைப் பொறுத்தே இருக்கிறது. அதில் வைட்டமின் ஏ-ம், வைட்டமின் பி-ம் செழுமையாக இருந்தால், அது உத்தமக் கொழுப்பாகக் கருதப்படும். சிறந்த கொழுப்பு பாலிலும் வெண்ணெயிலும் பாலாடையிலும் நமக்குக் கிடைக்கிறது. முட்டையின் மஞ்சட் கருவிலும் கொழுப்புச் சத்து நிறைய இருக்கிறது.

கொழுப்புச் சத்து சுலபமாக ஜீரணமாக வேண்டுமானால், அதிகம் பொரிக்கவோ தாளிக்கவோ கூடாது.

—நல்வழி

வர்களாகத் திகழ்தல் வேண்டும். ஆண்கள் மட்டுமா இவ்வாறு திகழவேண்டும்? இல்லை. இல்லை. பெண்களும் இவ்வாறே இருக்க வேண்டும். உடல் வன்மை போர்வீரர்களுக்கும் ஊர் வீரர்களுக்கும் மட்டுமா? அலுவலர்களுக்கும் தேவை. தொழில் செய்வோருக்கும் தேவை.

எல்லோருக்கும் இன்றியமையாத உடல் வலிமையை எப்போது பெறுவது? இளமையில் தானே பெறமுடியும். நடுமையிலும் முதுமையிலும் பெற இயலுமா? இளமையில் பெறப் போதிய உடற்பயிற்சி தேவை. அதற்கு வழிவகைகள் செய்வது எல்லாக் கல்விக் கூடங்களின் உடனடியான கடமையாகும்.

உடற்பயிற்சியால் பலன் பெற மற்றொன்றும் தேவை. அது எது? உணவு. போதிய உணவு; சத்துள்ள சீர் உணவு. அது, இன்றைய நிலையில் பலருக்குவீட்டில் கிடைப்பதில்லை. வீட்டில் கிடைக்காத படிப்பை, பள்ளியில் கொடுக்கவில்லையா? அதுபோல வீட்டில் கிடைக்காத உணவைப் பள்ளிகள் கொடுக்கவேண்டுமல்லவா? இப்போது 2,000 தொடக்கப் பள்ளிகளில் 13,10,000 சிறுவர் சிறுமிகளுக்கு நடுப்பகல் உணவு கிடைக்கிறது. இத்திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும். சத்துள்ள காய்கறிகள் கீரை வகைகள் ஆகிய வற்றை நிறையச் சேர்க்கவேண்டும். அப்போதுதான் குழந்தைகளுக்குக் கட்டான உடல் வாய்க்கும்.

பசி, இடம் பார்த்தா வரும்? பருவம் பார்த்தா வரும்? தொடக்கப் பள்ளிப்பிள்ளைகளோடு நிற்குமா? எல்லோரையும், எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் வாட்டி வதைக்குமல்லவா? பசி வந்திடப் பத்தும் பறந்து போமல்லவா? உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் இதற்கு விலக்கா? அவர்களில் பலர் ஏழைகள். அவர்களுக்கும் வீட்டிலோ போதிய உணவு கிடைப்பதில்லை. அக் குறையைத் தீர்ப்பது எப்படி? நடுப்பகல் உணவுத் திட்டம் ஒன்றே வழி. தற்பொழுது 650 உயர் நிலைப்பள்ளிகளில் 18,000 மாணவ மாணவிகளுக்கு இலவச உணவளிக்கப் படுகிறது. அப்பள்ளிகளில் உள்ள எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் உணவளிக்கும் வகையில் இதை விரிவுபடுத்த வேண்டும், மேலும் எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் பகல் உணவுத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவும் வேண்டும். போதிய சத்துள்ள உணவைக் கொடுத்து உடற்பயிற்சி செய்யவைத்தால், நம் பையன்களும் பெண்களும் நல் விளங்காளைகளாக வாட்டசாட்டமாக வளராமலா போவார்கள்? நாட்டுப் பற்று, ஒற்றுமை உணர்ச்சி, உடல் வலிமை ஆகிய வற்றை வளர்த்தபின் செய்ய வேண்டியதென்ன?

உயர்நிலைப்பள்ளி மாணவர்களையெல்லாம் 'தேசிய ராணுவப்

படை' (என். ஸி. ஸி.)யில் சேர்க்கவேண்டும். அடுத்த ஆண்டில் இப்படை பெருமளவில் விரிவாக்கப்படலாம். எல்லாப் பள்ளிகளிலும் என். ஸி. ஸி. ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே எல்லோரும் இதில் சேர்ந்து ஒழுங்கு, கட்டுப்பாடு, தாக்குப்பிடிக்கும் ஆற்றல் ஆகிய பண்புகள் அமைய இப்போதிருந்தே தயார் செய்யுங்கள்.

உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் பெண்களைத் தையல் வேலையிலும் பின்னல் வேலையிலும் வல்லவர்களாக்க முயலுங்கள். வெண்பனி மூடிய இமயத்தின் கடுங்குளிரில் நாடுகாக்கக் கடும்போர் புரியும் ஜவான்களுக்குக் கதகதப்பான ஆடைகள் தேவை. அவர்களுக்குக் கம்பளிச் சட்டையும் கையுறையும் காலுறையும் குல்லாவும் வேண்டும். பெண் பள்ளிகள் இவற்றைத் தயாரிப்பதில் அதிகம் ஈடுபடும்படி வேண்டுகிறேன். பிறபள்ளிகளில் உள்ள பெண்களும் இவ்வுதவி செய்யத் தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் 'முதல் உதவி' 'நர்ஸிங்' ஆகியவற்றில் பயிற்சிபெறவும் முந்தவேண்டும்.

இவற்றோடு நின்றதா பள்ளிக்கூடத்தின் பணி? உயிரைக் கொடுத்து நாட்டைக் காக்கத் துணிந்துள்ள போர் வீரர்களுக்கு ஆதரவாக, காசுபணத்தைத் தாராளமாக வழங்கவேண்டும். அடுத்து அடுத்து வழங்கவேண்டும். எவ்வளவு போதும் என்று கேட்காமல், எவ்வளவு முடியுமோ அவ்வளவும் வழங்கவேண்டும்.

இவ்வகையில் பள்ளிகள், இது வரை செய்துள்ளது பெரிது. இனியும் அப்படியே செய்யும் என்பது திண்ணம்.

உடற்பயிற்சியைப் பெருக்குவதால், புதுப்பயிற்சிகளை மேற்கொள்வதால் கல்வித் தேர்ச்சியைக் குறையவிடலாமா? ஆகாது. ஆகாது. எல்லாப் பள்ளிகளும், எக்குறையையும் பொருட்படுத்தாது, அரும்பாடுபட்டு எல்லோரும் எல்லா வகுப்புகளிலும் தவறாது தேறும் நிலையை அடைய முயலவேண்டும். மாணவ மாணவிகளின் ஆர்வத்தை இம்முயற்சியில் ஒருமுகப்படுத்த வேண்டும்.

இக்காலம் விஞ்ஞான காலம். வருங்காலமும் விஞ்ஞானகாலமே. ஆகவே விஞ்ஞானத் தேர்ச்சி மிகுதியாக வேண்டும். விஞ்ஞானப் பாடத்தில் அதிகக் கவனஞ் செலுத்தவேண்டும். விஞ்ஞானப் பாடம் சும்மா பார்த்துப் படிக்கும் பாடமா? அல்லவே அல்ல. அது செய்துகாட்டிக் கற்பிக்க வேண்டியபாடம். அதுமட்டுமா? செய்யவைத்துக் கற்கவைக்கும் பாடம். எதைச்செய்துகாட்டுவது? எதைச் செய்யவைப்பது? ஆசிரியர்கள் சோதனைகளைச் செய்து காட்டுவது. மாணவர்களைச் சோதனைகள் செய்ய வைப்

பது. இவ்விரண்டும் இல்லாத விஞ்ஞானப் படிப்பு வீணான படிப்பு. ஆகவே பள்ளிக்கூடங்களில் விஞ்ஞான சோதனைகளைச் செய்து காட்டுவதிலும் மாணவர்களைச் செய்யவைப்பதிலும் பெருமளவு கவனஞ்செலுத்தவேண்டும். ஒவ்வொரு மாணவனும் மாணவியும் சில சோதனைகளையாவது செய்து பார்க்க வாய்ப்பும் வசதியும் செய்யவேண்டும்.

நல்லது. இது எல்லோரும் ஒப்புக்கொண்ட கொள்கையே. சோதனைகள் செய்ய, விஞ்ஞானக்கருவிகள் வேண்டுமே. இன்று பல பள்ளிகளில் அவைகள் இல்லையே. இதுதானே உங்கள் ஐயம்? உண்மை. இப்படியே இருக்கலாமா? ஆகாது. அந்தக் கருவிகளையும் சந்தையிலே விலைகொடுத்து வாங்கவா? அதற்குப் பணம் கிடைத்தாலும், பொருள் கிடைக்க எத்தனைக் காலம் ஆகும்? நெடுங்காலம் ஆகுமே. அதுவரையில் விஞ்ஞானப்படிப்புப் பாழாகலாமா?

உயர்தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் ஆன விஞ்ஞானத் துணைக்கருவிகள் பலவற்றை, எளிதாகக் கிடைக்கும் பல பழைய பொருள்களைக் கொண்டே, அமைத்துவிடலாம். தமிழ்நாட்டில் நடக்கும் ஒவ்வொரு விஞ்ஞானப் பொருட்காட்சியிலும் இத்தகைய 'கைச்சரக்கை'ப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். இனியும், 'கடைச்சரக்கு' கிடைக்கும் வரையில் காலத்தை வீணாக்கலாமா? கூடியவரையில் துணைக்கருவிகளைக் கைச்சரக்காகவே பள்ளிகளில் செய்து கொண்டால், இன்றியமையாத சில நுட்பக் கருவிகளை மட்டும், உள்நாட்டுச் சந்தையிலோ, வெளிநாட்டுச் சந்தையிலோ பெற்றுக்கொள்ளலாம். பள்ளிகளின் கவனம் கடைச்சரக்குகளைவிட்டு, கைச்சரக்குகளின் பக்கம் திரும்புவதாக! விஞ்ஞானப்பாடம் கேள்விப் பாடமாக நிற்காமல் செய்முறைப் பாடமாக மலர்வதாக! அவ்விஞ்ஞான அறிவு, நம்வீட்டு வாழ்க்கையையும் நாட்டு வாழ்க்கையையும் பாதுகாப்பையும் பலப்படுத்துவதாக!

கொழுந்துவிட்டெரியும் நாட்டுப்பற்று, தகர்க்கமுடியாத ஒற்றுமையுணர்ச்சி, வலிமை கொண்ட தோள்கள், ஆகியவற்றைப்பெருக்குவது பள்ளிகளின் பொறுப்பு. தவிர, பயிற்சிபெற்ற துணைப்படைவீரர்கள், தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகள், வளரும் விஞ்ஞானத்தோடு விளையாடக்கூடிய விஞ்ஞானிகள், ஆகியோரைப் பெருக்குவதும் பள்ளிகளின் பெரும் பொறுப்பல்லவா? நாட்டுப் பாதுகாப்பிற்காகப் பள்ளிகள் இப்பணிகளில் தனிக் கவனஞ்செலுத்த வேண்டாவா? இம்முறையில் தம் பங்கைச்செலுத்த முந்துகின்றன பள்ளிகள். அப்படித்தானே? வளர்க உங்கள் முயற்சி, வெல்க பாரதம்.

—"வானொலி"

பெற்றோர் கவனிப்பு இன்மையே சிறுர்கள் தவறு வழியில் செல்லக் காரணம்

பள்ளி ஆசிரியர்கள் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் சேவை செய்யத் திட்டம்

(ஸிபில் ஷ்கீர்)

மேனுடுகளில் தகப்பன் தாய் இருவருமே வேலைக்குச் சென்று விடுவதால் குழந்தைகளைச் சரிவரக் கவனிப்பார் யாருமின்றி அவர்கள் தவறான வழிகளில் இறங்க நேரிடுகிறது. இவர்களைச் சரியான வழியில் திருப்பும் பொறுப்பு பள்ளி ஆசிரியர்களுடையதாக இருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் இதற்காக ஆரம்ப செகண்டரி பள்ளியில் இனி உபாத்தியாயர்கள் வேலைக்கு வருபவர்கள் 6 வாரமாவது கட்டாயம் சிறுவர் சீர் திருத்தப் பள்ளிகளில் படிப்புச் சொல்லித்தர வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நமது நாட்டிலும் ஆண் பெண் இருவரும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்திருப்பதால் இத் தகைய நிலை இங்கும் ஏற்படலாம்.

பிராங்பர்ட். (டாட்) — வாலிபர்களின் நலனுக்காக உள்ள ஜெர்மன் சங்கம் ஒரு புது திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. இதன்படி ஆரம்ப செகண்டரி பள்ளிகளில் இனி உபாத்தியாயர்களாகச் சேவை செய்ய வருபவர்கள் குறைந்தது 6 வாரகாலமாவது தவறு செய்யும் சிறுவர்கள் சீர்படுத்தப்படும் ஸ்தாபனத்திலோ அல்லது இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியிலோ ஆசிரியராகச் சேவை செய்யவேண்டும். இந்தத் திட்டம் பற்றிய சாதக பாதகங்கள் பற்றி இப்போது பேசப்பட்டு வருகிறது.

மேற்கு ஜெர்மனியிலுள்ள கல்வி அதிகாரிகள், புள்ளி விவரங்களிலிருந்து சிறுவர்கள் தவறான பாதையில் போவது அதிகரித்துள்ளதென்றும் ஆகவே இந்தத் திட்டம் ஆதரிக்கத் தகுந்தது என்றும் அபிப்பிராயப் படுகின்றனர். சமூகப் பிரச்னையாக உருவாகும் இந்த நிலையைச் சமாளிக்க அவசியம் ஏதாவது செய்தாகவேண்டும் என்று இவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆசிரியர்கள்தான் சிறுவன் எங்கே தவறு இழைக்கிறுன் என்பதைக் கண்டறிய முடியும் என்றும் அவனைச் சரியானபாதையில் திருத்த அவரால்தான் முடியும் என்றும் இத்திட்டத்தை ஆதரிப்பவர்கள் கூறுகிறுர்கள். ஆரம்பப் பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் பாதிப்பேர்களுக்குக்

குறையாமல் குற்றமனப்பான்மையுள்ளவர்களாக இருப்பது தெரியவந்திருக்கிறது. நான்கு குழந்தைகளில் ஒன்று தாய் தந்தை பராமரிப்பு இல்லாமலேயே வளர வேண்டியிருக்கிறது. தாயும் தந்தையும் வேலைக்குப் போய்விடுகிறார்கள். இவர்கள் நேரிடைக் கவனிப்பு இல்லாமையே குழந்தைகள் தவறிய வழியில் செல்ல வழி செய்வதாக ஆகிறது.

தாய்மார்கள் ஆபீஸ் வேலையுடன் வீட்டு வேலையையும் கவனிக்க வேண்டியிருப்பதால் குழந்தைகளைக் கவனித்து வளர்க்கும் பொறுமை அவர்களுக்கு இல்லாமல் போகிறது. ஆகவே முன்பு சிறுவர்கள் முன்பில்லாத பெரும் பிரச்சினைகள் இப்போது அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப் பிரச்சினையைக் கவனித்துத் தீர்க்கும் பொறுப்பு சமூக நலக் கல்வி நிபுணர்களையே இப்போது சார்ந்திருக்கிறது. இவர்கள் குழந்தைகளுக்கு நல்ல முறையில் கல்வி போதித்து அவர்களைச் சரியான முறையில் திருத்தி நடக்கச்செய்வதுடன் பெற்றோர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் எவ்விதத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதையும் கூட இவர்கள் நிர்ணயித்து அதற்கான வழி செய்யவேண்டும்.

ஹாம்பர்க்கில் இது சம்பந்தமான கருத்தரங்குகள் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. இளம் குற்றவாளிகள் ஏன் குற்றம் செய்யும் மனப்பான்மையுடையவர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் எக்காரணத்தினால் அந்நிலையை அடைகிறார்கள்; அவர்களைத் திருத்தும் வழி என்ன இவை பற்றி எல்லாம் ஆசிரியர்கள் ஆராய்ந்து அறியும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

(யூ. பி. எஸ்.)

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

றிய பின்னரும், 'முதிரா இளைஞர் ஆருயிரும் திருகிச் செருகும் குழல் மடவீர்!' என்று செப்பும்படி மாதராரும், 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினன்' என்பதற்கு ஏற்றவாறு 'அழியா அழகுடைய' ஆண்மையாளரும் கொழிக்கின்ற ஒரு சமுதாயம் உருப்பெற வேண்டும்! அதற்காக?—இப்போதைக்குக் கவலையைக் குறைப்போம்!

— சுதேசமித்திரன்.

இளமை இரகசியம்

[ஆலோலம்]

'சந்ததமும் இளமையோடிருக்கலாம்!' என்று பாடினார் ஒரு மகான். எப்போதும் இளமையோடு இருப்பது எப்படி? அந்த இரகசியம் தெரிந்துவிட்டால் அகிலமே ஆனந்தப் பூங்காவாக ஒரு நொடிக்குள் மாறிவிடாதா? இத்தனை ஸ்னோவும், பவுடரும், கிரீம்களும், சோப்புச் சிப்பு 'மணங்கூடு தைலங்க'ளும் அடுக்கடுக்காகக் குவிந்து கொண்டிருக்கவா செய்யும்?

'நீங்கள் எப்படி இவ்வளவு இளமையோடு காட்சி தருகிறீர்கள்?' என்று நூறாண்டு நிரம்பிய சமயம் சர். விச்வேச்வரய்யாவிடம் ஒரு நண்பர் கேட்டார். 'அதுவா? தினசரி மூன்று மைல் நடக்கிறேன்' என்றார் அந்த மேதை.

மூன்று மைல் என்ன? முப்பது மைல்கள் நடப்பதற்கும்—சினிமா நட்சத்திரங்கள் உட்பட—பல ஆட்கள் தயார்! கால்வலி எடுப்பதுதான் கைகண்ட பலன் என்பது சொல்லாமலே விளங்கும்! நேருஜி சொல்கிறார்:

'நான் வனப்போடு காட்சி அளிக்கும் இரகசியம் ரொம்ப சாமான்யமானது! எதற்காகவும் நான் அதிகமாகக் கவலைப்படுவது கிடையாது!'

அடேயப்பா! கவலையைத் தொலைத்தால் வனப்பு நம்மைத் தேடி வந்தடையுமா? அதே கவலையால் இன்னும் மெலிந்துவிடாதீர்கள்! மனம் கவலையுற ஆயிரங் காரணங்கள் இருக்கின்றன என்று கவியரசர் பாரதி கூறினாரே! எழிலோடு பொலிய ஒன்றையாவது சொன்னாரா?

கவிஞர்களும், தத்துவ ஆசிரியர்களும் குறிப்பிடுவது உள்ளத்தின் வனப்பை! இதயம் எழிலோடு பிரகாசிக்க வேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள்.

'எனக்குள் நிறைந்திருக்கும் மகிழ்ச்சியோ இன்ப நினைவுகளோ நாள் வற்றாமல் பொழிந்து கொண்டிருக்கும்வரை பசுமை என்னை விட்டு எப்படி நீங்கும்?' என்றார் இரவீந்திரநாத் தாகூர். எண்பது ஆண்டுகள் கடந்தும் தாடிகூடச் சோபையோடு அழகு கூட்டிற்று குருதேவருக்கு!

மாம்பழம் போன்று மினுமினுப்பாக சரீரமும், சாரீரமும் டாக்டர் சி. பி. இராமசாமி அய்யரிடம் சரண் அடைந்திருக்கின்றனவே, அந்த இரகசியத்தை அவரே புகன்றார்:

'நல்ல நூல்களைச் சுவையுங்கள்; உள்ளும் புறமும் பொன்னுக உதவும்.'

'காண்பது கண் அன்று கருத்து' என்கிருர் ஒரு தீர்க்க தரிசி.

'அத்தான்! இதோ உங்கள் அழகுத் தெய்வம்! பொங்கிப் பூரிக்கும் தங்கக் கொடி இன்று துடித்துத் துவண்டு சுருண்டு கிடப்பது உங்களுக்குத் தென்படவில்லையா?' என்று நாயகி நலிலும்போது நாயகன் வெறிச்சோடிக் கிடக்கும் விண் வெளியை நோக்குகின்றுன். ஆட்டம் குளோஸ்! அழகு அன்றைக்குக் கட்டோடு விரிந்து அள்ளிக் கொண்டது! இன்று இக்குத் தெரியாமல் மாய்ந்தொழிந்தது! இளமை பாதரசம்! நிலை கொள்ளாதது. அதனுல்தான் வஜ்ஜிரம் போன்று மங்காமல் இருக்க மார்க்கத்தைத் தேடுகிருர்கள்.

ஆங்காங்கு 'அழகுப்போட்டி' நடப்பதிலிருந்தே, ஒன்றைவிட ஒன்று அழகாக இருக்கிறது என்று ஊர்ஜிதமாகிறது. ஆனுல் 'நீயா? நானு?' என்று ஒவ்வொரு உள்ளமும் அக் கேள்வியைக் கேட்டுக் கொள்கிறது!

'கண்ணுடிக்கு முன் நிற்பவள் அழகி!' என்றுர் ஒரு அனுபவஸ்தர். ஆயிரம் கவலைகள் இருந்தாலும் சரி, இரண்டாயிரம் வடுக்கள் இருந்தாலும் சரி. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்!

என்னைக்கூட என் அம்மா சீராட்டிப் பாராட்டுவதைக் கேட்டுக் கேட்டு, 'அழகன்' என்றே எண்ணியிருந்தேன். மனைவி வந்த பிறகுதான் அந்த இரகசியம் வெட்ட வெளிச்சமாயிற்று.

உலகத்தில் ஒரே ஒரு மன்மதனும், ஒரே ஒரு ரதியும்தான் இருப்பதாகப் படித்தேனென எனக்கு ஞாபகம். ஆனுல், ஆயிரக்கணக்கான திருமணங்கள் அனுதினமும் நடைபெறுவதிலிருந்து அந்த நம்பிக்கை தளர்ந்து போகிறது!

'அழகு எங்கே இருக்கிறது? அழகு என்றுல் என்ன?' என்பதை வைத்து அறிஞர்களும், மனுேதத்துவ நிபுணர்களும் மண்டையை உடைத்துக்கொள்கிருர்கள். இயற்கைக்கும் செயற்கைக்கும் அடிநாளிலிருந்து இதற்காகப் பலத்த போட்டி!

வெண் கூந்தலைக் கருங்கூந்தலாக்குவதும், வீழ்ந்துபட்ட மீசைக்குப் புதுமெருகேற்றி — வெண்ணெய் போட்டாவது குழந்தையை நீவிக் குளிப்பாட்டுவது போல்—மீசையை நிமிர்த்திவிடுவதும், பழைய தந்தங்களுக்குப் புதுப்பற்கள் கட்டுவதும், காகிதப்பூச் சிங்காரமும், கச்சை இறுக்கிக்கட்டப் பஞ்சைத் துணை நாடுவதும்—உண்மை அழகன்று! குட்டியில் கழுதைகூட அழகாக இருக்கும் என்று லேசாக ஒதுக்கி விட்டால் போதுமா? வயது முற்

(26—ம் பக்கம் பார்க்க)

தற்காலத் தெய்வங்கள்

[சி. சுப்பிரமணியம், *மத்திய அரசின் எஃகு அமைச்சர்*]

'இன்றைய குழந்தைகள் நாளைய குடிமக்கள்' என்றவாக்கு எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும் பொருந்தும். இதை நன்கு உணர்ந்தே சோவியத் யூனியனில் குழந்தை வளர்ப்பில பெரும் கவனம் செலுத்துகிறார்கள். குழந்தையினுடைய உடல் வளர்ச்சி எவ்வாறு பிறந்த நாளிலிருந்து கவனிக்கப்படவேண்டி இருக்கிறதோ, அதே முறையில் மன வளர்ச்சியையும் கவனிப்பது அவசியம் என்பது, இன்று எல்லாக் குழந்தை தத்துவ நிபுணர்களும் ஒப்புக் கொண்ட சித்தாந்தம். உண்மையில் ஒரு குழந்தையின் பிற்கால மனோ வளர்ச்சிக்கான அஸ்திவாரம், சிறு குழந்தைப் பருவத்திலேயே அமைந்து விடுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டுதான், பிற்காலத்தில் அறிவுக் கட்டிடத்தை எழுப்ப வேண்டியுள்ளது. எந்த அளவுக்கு அஸ்திவாரம் உறுதியாக உள்ளதோ, அந்த அளவிற்குத்தான் நல்ல வலுவான கட்டிடம் அமைய முடியும். இந்த அடிப்படையில்தான், சோவியத் யூனியனில் குழந்தைகள் வளர்ப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். நாட்டிலே பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும், நல்ல சூழ்நிலையில் வளருவதற்கும், சிறந்த பயிற்சியைப்பெறும் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் முயலுகிறார்கள்.

மூன்று வயது முடியும்வரை குழந்தைகள் நர்சரிகளில் வளர்வதற்கு ஏற்பாடு செய்து விடுகிறார்கள். எந்தத் தாய் தகப்பனும் தங்களுடைய குழந்தைகளை இம்மாதிரியான நர்சரி குழந்தை நிலையங்களில் விட்டு வைக்கலாம்.

இப்போது இருபது லட்சம் குழந்தைகளுக்கு நர்சரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் ஐந்தாண்டுகளுக்குள்ளாக, நாற்பது லட்சம் குழந்தைகளுக்கு இந்த வசதி செய்துதரத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதிலும் முக்கியமாகத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை, தாங்கள் வீட்டில் இல்லாதபோது கவனித்துக் கொள்ள வேறு வசதி செய்துகொள்ள முடியாது. எனவே அவர்களுக்குத் தங்களுடைய குழந்தைகளை இம்மாதிரி நர்சரி நிலையங்களில் கொண்டு வந்துவிட முதலுரிமை அளித்திருக்கிறார்கள்.

காலையில் ஏழு அல்லது எட்டு மணிக்குக் குழந்தைகளைக்கொண்டுவந்து நர்சரிகளில் விட்டு விட்டால், மாலை வந்து அவர்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வரை நர்சரியிலுள்ளவர்கள் கவனித்

து கொள்கிறார்கள். இங்குக் குழந்தைகளுக்கு வேண்டிய வைத்திய வசதி, உடல் வளர்ச்சிக்கான பயிற்சிகள், பேசுவதற்குப் பழக்கப்படுத்துதல், ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ளப் பயிற்சிகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. இதற்கெனத் திறமை மிகுந்த நன்குபயிற்சி பெற்ற தாதிமார்கள் நியமிக்கப்படுகிறார்கள். நல்ல புஷ்டியுள்ள உணவும் கொடுக்கப்படுகிறது.

இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை, கோடைக் காலங்களில், கிராமப் புறங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சுகாதார நிலையங்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள். சாதாரணமாக ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தான், கோடைக்காலக் குழந்தைகள் முகாம்கள் நடத்தப்படுகின்றன. மற்றக் குழந்தைகளுடன் கூடி வாழக்கூடிய பழக்கம் அங்கு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு குழந்தைகள் வளருவதற்கான சம வாய்ப்பு எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுவது தான், கம்யூனிஸ சமுதாயத்தின் குறிக்கோள்.

உண்மையில் இத்தகைய சம வாய்ப்பை வயதான பின்னர் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதென்பது, இயலாத காரியம். உண்மையான சமவாய்ப்பு குழந்தைப் பருவத்தில்தான் ஆரம்பமாக வேண்டும். இவ்வாறான திட்டங்களின் மூலமாகத்தான், நம் நாட்டிலும் ஏற்றத் தாழ்வற்றதொரு சமுதாயத்தை அமைக்க முடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

இவ்வாறு குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் போது, அக் குழந்தைகளைப் பெற்றோரின் பராமரிப்பிலிருந்து முழுவதும் நீக்கி விடுவதும் குழந்தைகளுக்கும் பெரும் தீமையை விளைவிக்கும், ஏனெனில், குழந்தை வளர்ச்சிக்கு மற்ற சௌகரியங்களுடன் தாயன்பும் மிக அவசியம். ஆரம்ப காலத்தில் சோவியத் யூனியனில் இந்த வாய்ப்பு ஓரளவு மறுக்கப்பட்டிருந்தது. இன்றைக்குத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பது அவசியமென்பதை உணர்ந்து, அதற்கான சௌகரியங்களையும் செய்து கொடுக்கின்றார்கள்.

மூன்றிலிருந்து ஏழு வயது வரையிலும் குழந்தைகள் நர்சரி பள்ளிக்கூடங்களுக்குப் போக வேண்டும் இப்பள்ளிக்கூடங்களில் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதில்லை. கதைகள் சொல்வது, பாடுவது, ஆடுவது, சித்திரம் வரைவது, பொம்மைகள் செய்வது, குழந்தைகளுக்கேற்ற உடற் பயிற்சி ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன இங்கும் விசேஷப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு அதிகத் திறமை பெற்றவர்கள் அவசியம். நம்

ஏுடைய நாட்டில் சிறுவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பதற்குக் குறைந்த படிப்பும், பயிற்சியும் இருந்தால் போதும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் உண்மையாக இக் கட்டத்தில தான் குழந்தைகளுக்கு மனோவளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும், கொடுப்பதற்கு நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள். இந்தக் குறையை நீக்குவதன் மூலம் தான், நம் குழந்தைகள் நல்லமுறையில் வளர்வதற்கு ஏற்பாடு செய்யமுடியும். இந்தக் குழந்தைகளையும் கோடைக் காலங்களில் விசேஷ சுகவாச நிலையங்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள் அங்கு மற்றக் குழந்தைகளுடன் கூடி வாழப் பழக்கப்படுகின்றார்கள்.

கல்வி மந்திரியுடன் கல்வித் திட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது குழந்தைகளை எந்த வயதில முறைப்படி நடக்கும் பளளிக் கூடங்களுக்கு அனுபபுவது நல்லது என்பதைப் பற்றிய பிரச்னை கிளம்பியது. சோவியத் யூனியனில ஏழு வயதுக்கு மேற்பட்டுத்தான் குழந்தைகளை எழுதப் படிக்கக கற்றுக் கொடுக்கும் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். இந்த வயதிற்கு முன்பே அவர்களுககு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது அவர்களுடைய வளர்ச்சியைத் தடை செய்கிறது என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். இப்போது ஏழு வயதும் கூட சரியல்ல, எட்டு வயதிற்குப் பின்னர் தான் குழந்தை எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற கருத்து உருவாகி வருகிறதாம். கூடியவிரைவில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும வயது எட்டாக உயர்த்தப்படலாம் என்றார் கல்வி மந்திரி.

நம்முடைய நாட்டில் குழந்தைகளைச் சிறு வயதிலேயே, ஐந்து வயதிற்கு முன்பே பள்ளிக்கு அனுப்பி எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது நல்லது என்று நாம் கருதுகிறோம். அதுதான் நடைமுறையிலும் இருக்கிறது. சமீபத்தில் இந்த வயதை ஆறாக உயர்தத வேண்டும் என்ற யோசனை இருந்தது. அதற்குப பலத்த எதிர்ப்பு நம் பெற்றோர்களிடமிருந்து ஏற்பட்டது.

நம் நாட்டைப் பொறுத்தவரை இவ்விஷயத்தில் இன்னொன்றையும் நம் கவனத்தில் வைத்துக் கொள்வது அவசியம். மற்ற நாடுகளிலெல்லாம் பள்ளிக்குச் செல்லுகின்ற வயதுவரை குழந்தைகளுக்குவிசேஷப்பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். நம் நாட்டில் பெரும்பாலான குழந்தைகள் எவ்விதக் கட்டுப்பாடும் பயிற்சியும் இன்றி வளர வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலை ஏழு அல்லது எட்டு வயது வரை நீடித்து விடுமேயானால், இதுவும் குழந்தைகளுடையமனோவளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருந்து விடும்.

ஆகவே இன்றைக்குக் கல்வி பயனுள்ள முறையில் போதிக்கப்

பட வேண்டும் என்று சொன்னால் பள்ளிக்கூடங்களுக்குப் போவதற்கு முந்திய பருவத்தில் இவர்களுக்கான நற்பயிற்சிகளைக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்வது மிக அவசியம். அவ்வித வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே, நம் நாட்டில் கல்வியின் தரம் கீழான நிலையில் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். பலர், வேறு நாடுகளின் பள்ளிக்கூடத்தில் இருந்து வரக் கூடிய குழந்தைகள் பெற்றிருக்கும் அறிவுத் தரத்தையும், நம் நாட்டுக் குழந்தைகளின் அறிவுத் தரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து நமது தரம் குறைவாக இருப்பதாக மதிப்பிடுகிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம், சிறு குழந்தைப் பருவத்தில் பயிற்சிக்கான வாய்ப்புகள் இல்லாத குறைதான். இது நீக்கப்படாதவரை முன்னேற்றம் காண்பது மிக அரிது.

பெற்றோரின் தரத்தைக் குழந்தைகளைப் பார்த்து மதிப்பிட்டுவிடலாம். அதேபோல் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை, அந் நாட்டுக் குழந்தைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

இன்று ஒவ்வொரு நாட்டிலும் குழந்தைகள் வளர்ப்பில் பெரும் கவனம் செலுத்துகிறார்கள். இதற்காகப் பெரும் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. முன்னேற்றமடைந்த சமுதாயங்களில், குழந்தைகள்தான் தெய்வங்களாகக் கருதப்படுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கு ஆராதனைகளும் வழிபாடுகளும். குழந்தை வழிபாட்டின் மூலமாகத்தான், உயர்ந்ததொரு சமுதாயம் அமைய முடியும் என்கிற கருத்து, இன்றைய தத்துவமாக விளங்குகிறது.

—"ஆனந்த விகடன்"

அறிவுச் சுடர்கள

சூரியனை வணங்குவது எங்கே கடமையாகக் கருதப்படுகிறதோ அங்கே சூரிய ஒளியை ஆராய்ச்சி செய்வது குற்றமாகத்தான் கருதப்படும்.

—ஜான் மார்லி

மனிதன் இயற்கையில் துஷ்டன் அல்ல. ஆனால் அவன் பெரிதும் தன்னலம் உள்ளவன். சோறு அளவுக்கு மிஞ்சினால் விஷம் ஆகிறது. அதுபோலத்தான் தன்னலமும் அளவுக்கு மிஞ்சினால் துஷ்டத்தனம் ஆகிவிடுகிறது.

—காண்டேகர்

நீ உண்மைகளை உரைக்கத் தொடங்கிவிட்டாயா? அப்படியானால் ஊரார் உன்னைத் தூற்றுவது நிச்சயம். நீ எவ்வளவுக் கெவ்வளவு உண்மைகளை உரைக்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு ஊராரின் தூற்றுதலும் அதிகமாகும் மறந்துவிடாதே.

—தாமஸ் மூர்

கண்ணகி கோவில்கள்

[பண்டிட் வி. நடேசன்]

பத்தினிக் கடவுள் கண்ணகிக்குப் பல இடங்களில் கோவில்கள் உள்ளன. அவை பற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் வெளியிடுகிறது இக் கட்டுரை.

ஆற்றிலுள்ள தீவு 'அரங்கம்' எனப்படும்; கடலிலுள்ள தீவினை 'இலங்கை' என்றழைக்கிறோம். இதிகாச காலம் முதல் தமிழகத்தோடு தொடர்புடைய இலங்கைத் தீவில் பன்னிரண்டு கண்ணகி கோவில்கள் இருக்கின்றன. இன்றும்கண்ணகியைத் 'துர்க்கை' என்றழைப்பர் சிங்களவர். கண்ணகி சிலையை நடுவில் அமைத்து, அதைச் சுற்றிலும் எட்டு வகை காளி விக்ரகங்களை வைத்து வணங்குகின்றனர் இலங்கைவாசிகள். 'சிலம்போற்சவம்' இங்கு நடைபெறுவதுண்டு. சிலம்பு ஒன்றை அலங்கரித்து நாகவாகனத்திலிருத்தி பவனி கொண்டு செல்வார்கள் சிங்களவர். ஆண்டுதோறும் நடைபெறும் ஆடி மாத வேல் விழா போன்று கண்ணகி விழாவும் நடைபெறும். கற்புக்கனல் கண்ணகியென உலகு அறிய 'தீமிதி விழா' போற்றப்படுகின்றது. சிங்களவர் தம் வழக்கங்களுக்கேற்ப 'சிலம்பு நோன்பு' என்றும் 'சிலம்பு விரதம்' என்றும் கொண்டாடுகின்றனர்.

இலங்கையின் பூர்வீகக் குடிகள் சிங்களவர்கள்தான். இவர்கள் பேசும் பாஷையே சிங்களம் எனப்படும். சிங்கள பாஷையில் 'சிலப்பதிகாரம்' எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திற்கும் சிங்கள பாஷையிலுள்ள கோவலன் கதைக்கும் வித்தியாசம் காணப்படுகின்றது. "சிலம்பககலா" என்றும் "பத்தினி பிடிமா" என்றும் சிங்களத்தில் கூறுகின்றனர். பாண்டியனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது: அந்தக் குழந்தையால் பாண்டிய ராஜ்யம் அழியும் என ஜோதிடர்கள் கூறினர்; மதுரை மன்னன் பயந்தான்; எனவே அரசனின் ஆணைப்படி அச்சிறு குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டனர் ஏவலாளர்கள். அப்பெட்டியினை மாசாத்துவானும் மாநாய்க்கனும் கண்டெடுத்தனர்; மாசாத்துவான் தன் சொந்த மகனாகிய கோவலனுக்கு வளர்ப்பு மகளாகிய கண்ணகியைக் கல்யாணம் செய்வித்தான் என்னும் கதையைக் தழுவியது சிங்களச் சிலப்பதிகாரம் ஆகும். இலங்கை ராஜதானிக்குத் தலைநகரம் இலங்காபுரமாகிய அனுராதபுரமாகும்.

இங்கு கயவாகு முதலில் பலி பீடம் கட்டியே கண்ணகிக்குக் கோவில் கட்டினர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

கண்ணகி தன் கணவனாகிய கோவலனோடு சுவர்க்கம் சென்ற பின்னரே சிங்களவர் பத்தினிக் கடவுளைப்பற்றி யறிந்தனர். தமிழ் நாட்டில் தோன்றிய பத்தினிக் கடவுளைக் கண்டு வியந்த கயவாகு மன்னன் இலங்கைக்குப் போய்க் கண்ணகிக்குக் கோவில் கட்டினன். அவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்த விக்ரகம் சேர நாட்டுச் சிலையின் நகல் என்று கூறப்படுகின்றது. மாளவ நாட்டு மன்னனும் கயவாகு போன்று மாளவ தேசத்தின் தலைநகரில் பத்தினிக் கோவில் அமைத்தான். இன்றும் மாளவ நாட்டில் அக்கோவில் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது. தமிழகத்திலும் தென்னிந்தியாவிலும் அஷ்டலட்சுமிகளின் வணக்கமும் சப்த கன்னிகைகளின் வழிபாடும் ஐம்பெரும் பத்தினிகளைப் பிரார்த்திப்பதும் உண்டு ஐந்து அழியாப் பத்தினிகளில் கண்ணகியும் ஒருத்தியாகும். இப்பெரும் பத்தினிக் கடவுளையே தமிழர் 'கற்புக்கனல்' என்றனர்.

கோவலன் கதை மலையாள மொழியில் இருக்கிறது. 'சிலம்பு கழி நோன்பு' என ஒரு சடங்கு இன்றும் மலையாளிகளிடையே உண்டு. பத்தினியாகிய மருமகள், மாமியார் வீடு புகு முன் அவளை வாயிற்படியண்டை நிறுத்தி மாப்பிள்ளையின் தாயார் (மாமியார்) தன் மருமகளின் காலிலுள்ள சிலம்பைக் கழற்றும் வழக்கமே இச்சடங்கு எனலாம். பெண்ணரசிகள் மலையாளத்தில் வீற்றிருப்பது யாவரும் அறிந்த உண்மை! 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்' எனும் பொய்யாமொழி பொய்யாதிருக்கப் பாடுபடும் நாடு சேர நாடேயாகும். சேரன் செங்குட்டுவனும் தன் மனைவியைக் கேட்டு, உத்தரவு பெற்றே கண்ணகிக் கோவில் கட்டினன் என்பது வரலாற்றுண்மை. தாய்மைக்குரிய ஸ்தானத்தை அளித்துள்ளது மலையாள நாடே.

பத்தினி பூஜையும் விழாக்களும் இன்றும் மேற்குக் கரை நாடுகளை ஒட்டியே வருகின்றன. திரௌபதி உற்சவம்போல் மலையாளத்தில் பகவதி சேவை மிகப் பிரசித்திபெற்றது; தீமிதிகதலும் உண்டு. கொச்சி சமஸ்தானத்திலுள்ள 'கொடுங்கல்லூர்' கோவிலில் எழுந்தருளியுள்ள பகவதியம்மனுக்குப் பேரிக்குப் பின் கண்ணகிக்கு இருந்ததுபோல் ஒற்றை முலையே உள்ளது. இச்சிலையை இலக்கியங்களில் "ஒற்றை முலைச்சி" எனும் பெயருடன் காணலாம். மதுராபுரி எரிந்ததைக் குறிக்கும் நாளிலும் கொடுங்கல்லூரில் 'பரணிப் பண்டிகை' எனும் பெயரால் பல்லாயிரம் பக்தர்கள் கூடி ஆண்டுதோறும் அணிவிழா கொண்டாடுகின்றனர்.

கொடுங்கோளூர் சேரநாட்டிலுள்ளது. இன்று இதனை மக்கள் கொடுங்கலூர் என்றும் கொடுங்கல்லூர் என்றும் அழைக்கின்றனர். திருவஞ்சைக்களத்திற்கு ஒன்றரை நாழிகை வழி தூரத்திலுள்ளது இது. திருவஞ்சைக்களமும் இன்று 'திருவஞ்சிக்குளம்' எனும் பெயராக மாறியுள்ளது. கொடுங்கோளூர்க்கருகே உள்ள மலையே 'செங்குன்று' எனலாம்; இம்மலையில்தான் கண்ணகி வேங்கை நிழலில் நின்றதாகக் கூறப்படுகிறது. இம்மலையையே 'நெடுவேள் குன்றம்' அல்லது திருச்செங்குன்று என்று காவியம் கூறுகின்றது. "திருச்செங்குன்று" என்றும் கூறலாம். கொடுங்கோளூரும் வஞ்சியெனும் திருவஞ்சைக்களமும் கொசியைச் சார்ந்தவை. இரண்டிடங்களும் மிக அடுத்தடுத்து உள்ளன.

மங்கலமடந்தை என்று மற்றொரு பெயர் கண்ணகிக்கு உண்டு. மங்கலாதேவி ஆலயங்கள் மலை நாட்டில் (மலபார்) பல இருந்தன; மங்கலாதேவியிருந்த இடமே மங்கலபுரம் எனப்படும். காளிக் கற்றளியைத் தலைமையாகக்கொண்டதே கல்கத்தா என்று வழங்கும் 'காளிகாட்' எனும் பெரிய பட்டினம். அது போல் மங்கலாபுரம் எனப்படும் மலைநாட்டு நகரமே 'மங்களூர்' என் மருவி வழங்குகிறது எனலாம். மங்களூரில் கண்ணகி கோவிலையே மங்களாதேவியம்மன் ஆலயம் என்று கூறி மங்களூர் வாசிகள் வழிபடுகின்றனர். மலையாள நாட்டிலுள்ள 'கிரேங்கனூர்' கண்ணகி கோவிலுள்ள மூலவிக்ரகத்திற்கு மார்பில் ஒரு திருமுலை உண்டு. ஆதலால் மக்கள் இக்கோயிலை 'ஒற்றை முலைச்சிக் கோவில்' என்று கூறுவர். சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் தம் உரையில் 'கண்ணகி துர்க்கையானாள்' என்று எழுதியுள்ளார். இது ஆராய்ச்சிக்குரியதே.

விருத்தாசலத்திலுள்ள 'மங்களம்' என்னும் ஸ்தலத்தில் கண்ணகி கோவில் இருக்கிறது; இங்குள்ள மூல விக்ரகம் மங்கலதேவி என்றும், மங்களாம்பாள் என்றும், மங்களாதியம்மன் என்றும், மங்கலாதேவியம்மன் என்றும் பெயர்கள் புனைந்துள்ளது. இந்நாளிலும் கண்ணகிக் கோவிலுக்குச் சேரநாட்டரசன் பெயரால் ஆண்டுதோறும் "சேரதானம்" வழங்கப்படுகிறது. நீலகிரியிலுள்ள பூர்வீகக் குடிகளும் இடையர்களுமாகிய தொதுவர்களும் படுகர்களும் கண்ணகிக்குக் கோவில்கட்டி வழிபடுகின்றனர். சேரன் செங்குட்டுவன் வஞ்சியைவிட்டு இமயம் செல்லுங்கால் ஒரு நாள் நீலகிரியில் தங்கினான். உதகமண்டலம் என்பதை மக்கள் இன்றும் ஒத்தை எனவும், ஒத்தைக்கல் எனவும், ஒத்தைக்கு எனவும் கூறுகின்றனர். 'ஒத்தைமுலைச்சிக்கல்' என்பதன் மருவே 'உதகமண்டு' எனலாம். பொன்

ளாச்சி மலையிலும் கண்ணகி கோவில் இருக்கிறது.

பொள்ளாச்சியை அடுத்த உடுமலைப் பேட்டையிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் தளி எனும் ஊர் ஒன்றுள்ளது; அந்தச் சிறிய கிராமம் "திருமூர்த்தி மலை"யின் அடிவாரத்திலுள்ளது. கண்ணகி கோவில் இத்திருமூர்த்தி மலையின் சரிவிலுள்ள குகைக்கோவிலாகும். மலைமேலுள்ளது பஞ்சலிங்காலயம். இங்கு ஐந்து அருவிகளுக்கிடையே இம்மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். குற்றாலம் போல் கண்கொள்ளாக் காட்சியை இம்மலை தருகிறது.

தமிழகத்தில் பல கண்ணகிக் கோவில்களிருந்தன; சில இருந்த இடமே தெரியாதொழிந்தன; சில இருக்குமிடம் பெயர் மாறியுள்ளன. தஞ்சை ஜில்லாவிலுள்ள நாகபட்டின எல்லைப்புறக் கிராமத்தில் ஒரு மரத்தடியில் கண்ணகி கோவிலுள்ளது. மதுரை ஜில்லாவிலுள்ள ஆற்றூரில் கண்ணகி கோவில் விளங்குகின்றது. இவையன்றி திருவாலவாயிலுக்கு முன்னுள்ள 'புதுமண்டப'த்தில் கண்ணகி சிலையைக் காணலாம். மீனாட்சியம்மைக்குப் பூஜை செய்யும் குருக்கள் இச்சிலைக்கும் தீபாராதனை செய்கின்றார்.

சென்னையின் வடக்கெல்லையிலுள்ள தியாகேசராலயத்தின் தெற்குப் பிரகாரத்தில் கண்ணகி கோவில் அமைந்திருக்கிறது. தினசரி பூஜையும் நடக்கிறது. இப்பத்தினிப் படிமத்தை 'வட்டப்பாறை நாச்சியார்' என்று கூறுவர். தனிக் கோவிலாக ஒரு கால் விளங்கியது இது என்று குறிக்க இதனை வட்டப்பாறை நாச்சியார் கோவில் என்றும் மக்கள் அழைப்பர். இந்நாளிலும் இக்கண்ணகியைத் தரிசிக்கவே வெள்ளிக்கிழமை தோறும் பெருங்கூட்டம் செல்லுகிறது. இவ்வம்மையாருக்கு ஆண்டு தோறும் பதினைந்து நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. இறுதி நாளில் பத்தினிக் கடவுள் செய்த மதுரா தகனத்தை நினைவூட்ட 'உற்சவப் பந்தலை'க் கொளுத்தி விடுதல் வழக்கம். இன்றும் இக்கோவிலில் நடக்கும் விழாவில் இதுவும் நடக்கிறது. நரபலியும் மிருகபலியும் நடந்ததாகவும் கூறுவர். இக்கண்ணகி கோவில்களில்பொற்கொல்லரைப் பலி செய்ததாகக் கூறும் விஷயம் கற்பனையேயல்லாமல் உண்மையன்று. இந்தியாவில் மிகப் பழமையான புண்ணிய ஸ்தலம் திருவொற்றியூர் எனப்படும். மலையாள நாட்டினின்றும் 'மதராஸ்' வந்தபின் மங்கல மடந்தை அமைதியுற்றாள்போலும். வட்டப்பாறை நாச்சியார் சிலைக்கு முன்னர் பலிபீடம் போல வட்டக்கல் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இக்கல்லிற்கும் கதை உண்டு.

வட்டப்பாறை நாச்சியாரின் கொடூர மூர்த்திகரத்தை ஆதி சங்கராச்சார்ய சுவாமிகள் தாமே

திருவொற்றியூருக்கு விஜயம் செய்து அடக்கியதாக ஒரு புராதன வரலாறும் உண்டு.

கி. பி இரண்டாம் நூற்றூண்டில் பத்தினிக்கடவுள் வழிபாடு இலங்கையிலும் மால்வாவிலும் தக்காணத்திலும் பரவியிருந்தது. போர்ச்சுகீசியர் ஆட்சி புரியும் கோவாவிலும் கண்ணகி கோவிலும் வழிபாடும் விழாவும் உண்டு. மாண்டவி நதி தீரத்தில் 'போந்தா' ஜில்லாவில் 'கோயிலா' (கோவலன்) கோவில் இருக்கிறது. கொங்கிணி பாஷையில் கோவலனை 'கோயிலா' என்றும் 'கொய்லோ' என்றும் சொல்லுகின்றனர் கோவானியர்கள். இங்கு ஆண்டுதோறும் "நெருப்புமிதி" திருநாள் சிறுஞ்சிறப்புடன் நடக்கிறது.

இத்தீமிதி திருவிழாவன்று பல்லாயிரக்கணக்கில் ஜனங்கள் கூடுகின்றனர். பத்தினிக் கடவுளை வணங்குவோர் நெருப்பில் நடக்கின்றனர். கோவானியரின் தாய்மொழியாகிய கொங்கிணி பாஷையில் கோவலன் கதை இருக்கிறது. இக்கதையின் சில பகுதிகளைப் படகோட்டிகள் ஒருவன்மாற்றி ஒருவனாகக் கோவலன்—கண்ணகி சம்பாஷணைபோல் பாடுகின்றனர். பாட்டிசைத்துத் தோணிகள் ஓட்டுதல் பண்டைப் பெருவழக்கமல்லவா? இக் கண்ணகி கோவிலுக்கும் மக்கள் வாழுமிடத்திற்கும் இடையே நதி ஓடுகிறது. மக்கள் படகேறி ஆற்றைக் கடந்து ஆலயம் அடைகின்றனர். கொங்கிணி பாஷையில் உள்ள சிலப்பதிகாரம் கோவலனைக் கொய்லோ என்றும் கண்ணகியை சந்திரா, என்றும் மாதவியை மௌலி என்றும் குறிப்பிட்டுள்ளது. 'கொய்லோவும்' 'சந்திரா'வும் சௌக்கார் (வணிகர்) இனத்தைச் சார்ந்தவர் எனவும் கடைத் தெருவில் நாட்டியக்காரியாகிய 'மௌலி' இட்ட மாலையைக் கோவலன் தன் கழுத்திலிருந்து கழற்ற முடியாமல் அவளிடம் அன்பு பூண்டு வாழ்ந்தான் எனவும் கூறுகின்றது. கோவாவில் சூசிலேசுரன் பூஜையுமிருந்ததாகத் தெரிகிறது. கண்ணகி கோவில் எனக் கூறாது கோய்லாக் கோவில் என்றழைப்பதால் பத்தினி விரதர்களைப் போற்றுவோர் கோவானியர் என்பது வெள்ளிடைமலை. ஆனால் தமிழ்நாடு பத்தினி பூஜையையும் பதிவிரதைகளையும் கண்ணகி போல் கொண்டது. மறக்கற்புடையார், திருமா பத்தினி, பத்தினிக்கடவுள், மங்கலமடந்தை, வீரபத்தினி, கண்ணகியினது பரியாய நாமங்கள். பாண்டியன் நெடுஞ்செழியனை வழக்கில் வென்று மதுரையை எரித்ததால் கண்ணகிக்கு உண்டான பெயர் வீரபத்தினி என்பது.

—"திங்கள்"

புலனடக்கம்

டாக்டர் மு. வரதராசன்

முன்பெல்லாம் பெற்றோர்கள் மக்களைத் தங்கள் மேற்பார்வையில் வைத்து வளர்த்துவந்தார்கள். பள்ளிக்கூடங்களிலும், ஆசிரியர்கள் அவர்களைத் தங்கள் நேர்பார்வையிலே காப்பாற்றி வந்தார்கள். பெற்றோர்களுக்குப் பரபரப்பான வேலை இல்லை; ஓய்வு இருந்தது. தம் மக்களை நன்றாகக் கவனித்துக் கொள்ள முடிந்தது. பரந்த உலகத் தொடர்பு இல்லை; சின்ன ஊர் தொடர்பே இருந்தது. குடும்பத்தில் இயந்திரம் போன்ற ஓய்வற்ற பரபரப்பு இல்லை; அமைதியாகக் கடமைகளைச் செய்யும் வாய்ப்புஇருந்தது. போக்கு வரத்துக் கருவிகள் மிகுதியாக இல்லை; ஆகையால் குடும்பங்களுக்கும் வெளியுலகத்திற்கும் இருந்த தொடர்பு அளவாக அமைந்து இருந்தது. கல்விக்கூடங்களிலும் மாணவர்களின் தொகை அளவாக இருந்தது. ஆசிரியர்கள் தங்களிடம் கற்க வந்த மாணவர்களைத் தனித் தனியே அறிந்து பழகி அவர்களின் பண்புகளையும் பழக்கங்களையும் அறிந்து கொள்ள முடிந்தது. ஆயிரம், ஈராயிரம் என்ற பெருந் தொகையான கூட்டங்கள் கல்விக் கூடங்களில் இல்லை. கால அட்டவணை, பாடப்பகுப்பு, தேர்வுகள், தேர்வு எண்கள் முதலிய இயந்திரம்போன்ற அமைப்புகள் இல்லை. படித்து மறக்கவேண்டிய பாட நூல்கள் இல்லை வாழ்க்கைக்கு வேண்டிய சிலவற்றை மட்டும் ஆர்வத்தோடு கற்று, உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளும் முறை இருந்தது. கால அட்டவணை தேர்வு முதலான செயற்கை அமைப்புகளுக்கு அடிமையாகாமல், நேருக்கு நேர் உள்ளத்தொடர்பு கொண்டு அறிவை வழங்குவதும், அறிவை வளர்ப்பதும் ஆகிய முறைகள் இருந்தன. ஆகையால். இளைஞர்களை ஒருபுறம் பெற்றோரின் அன்பும், மற்றொரு புறம் ஆசிரியரின் அன்பும் நெறி தவறாமல் காப்பாற்றி வந்தன. இன்று குடும்பங்களில் வெளியுலகப் பரபரப்பும் வேகமும் குடிபுகுந்துவிட்டன. கல்விக்கூடங்களில் அன்பு ஆள்வதற்கு இடமில்லாமல் சட்ட ஒழுங்குகளும் தேர்வு எண்களும் ஆள்வதற்கே இடமுள்ளது. ஆகையால் இன்றைய இளைஞர்களின் வளர்ச்சியில் ஒரு குறை ஏற்பட்டுவிட்டது. தாய்ப்பால் இல்லாமல் வளரும் குழந்தைகள் போலவே, இன்றும் இளைஞர்கள் பெற்றோரின் அன்புக் காப்பும் ஆசிரியர்களின் அன்புக் காப்பும் இழந்து வளர்கின்றனர். ஆதலின், இளைஞர்களின் வாழ்வில்

சில தீமைகள் புகுவதற்கு இடம் ஆயிற்று. எப்படியோ குடும்பங்களில் வளர்ந்து, கல்விக்கூடங்களில் கற்று, வெளியுலக வாழ்க்கையில் ஈடுபடும்போது, இளைஞர் பலர் நெறியற்றவர்களாக ஆகிறார்கள்; பலர் பண்பற்றவர்களாக ஆகின்றனர்; சிலர் குறிக்கோளை அற்றவர்களாக மாறுகின்றனர்; சிலர் உள்ளம் இல்லாதவர்களாகவும் வாழ்கின்றனர்; சிலர் உடல் நலமும் இழந்தவர்களாகக் கலங்குகின்றனர்; ஒருசிலர் மட்டுமே நெறியும், பண்பும், குறிக்கோளும் உள்ளமும் உடல் நலமும் காத்து நன்மக்களாக வாழ்கின்றனர்.

சென்றது மீளாது

இதனால், கழிந்த பழைய நிலையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்பது கருத்து அல்ல அது வெறுங்கனவே. மாறியமைந்த உலகத்தை மீண்டும் பழைய நிலைக்குத் திருப்பிவிட முடியாது சென்றது இனி மீளாது. பழமையில் நன்மை இருந்தது போலவே, புதுமையிலும் நன்மையான பகுதி உண்டு. உலகில் எல்லாத் துறைகளிலும் நன்மை தீமை கலந்திருத்தல் போலவே, இந்தப்புது வாழ்க்கையமைப்பிலும் நன்மையும் தீமையும் உண்டு. நன்மையைப் போற்றித் தீமையைக் களைவதில் விழிப்பாக இருந்தால் அது போதும். இன்றைய புதிய அமைப்பிலும் இளைஞர்கள் நன்றாக வளர்வதற்கு அதுவே வழியாகும்.

ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் என்றால், சிலவற்றை இழந்துதான் வேறு சிலவற்றைப் பெற முடிகிறது. இணையற்ற வகையில் முன்னேற்றங்களைக் காணும் இந்த நூற்றாண்டில் இந்தத் துறையிலும் சிலவற்றை இழக்க நேர்ந்தது இயல்பே. அவற்றிற்கு ஈடாகப்பெறக்கூடிய நன்மைகளை விழிப்பாகக் காத்துப் போற்றுதல் கடமை ஆகும்.

முன் காலத்தில் பெற்றோர்கள் மக்களின் உடம்பையும் உள்ளத்தையும் வளர்த்துக் காப்பாற்றி வந்தார்கள். ஆசிரியர்கள் அவர்களின் உள்ளத்தையும் அறிவையும் வளர்த்துக் காப்பாற்றினார்கள். இக்காலத்தில் இளைஞர்களின் உடம்பைக் காப்பதற்குப் பெற்றோர்களும் மருத்துவர்களும் உதவுகின்றனர். அவர்களின் அறிவை வளர்த்துக் காப்பாற்ற ஆசிரியர்களும் உள்ளனர்; பத்திரிகை படக்காட்சி முதலியனவும் உள்ளன. ஆனால், வளர்த்துக் காப்பாற்ற ஆள் இல்லாமல் திக்கற்ற நிலையில் விடப்படுவது இளைஞர்களின் உள்ளமே.

இளைஞரின் உள்ளம்

இந்த நிலையிலும் இளைஞர் சிலர் நல்லவர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் வளர்ந்து முன்னேற முடிகிறது என்றால், அதற்குக் காரணம் சில. ஒன்று பரபரப்பான வாழ்க்கைக்கு இடையே இன்னும் சில பெற்றோர்கள் தம் மக்களின் உள்

ளத்து வளர்ச்சிக்கு வேண்டிய அன்பும் ஆதரவும் எடுத்துக் காட்டும் தர முடிகிறது. மற்றொன்று சில மாணவர்கள் எப்படியோ நல்ல ஆசிரியர்களை எடுத்துக் காட்டாகக் கொண்டு நம்பிப் பின் பற்றி, தொலைவிலிருந்தும் பார்த்து முன்னேற முடிகிறது. இன்னொன்று, கற்கும் நூல்களிலே சில நல்ல பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு முதலியவை அவர்களின் நெஞ்சை ஈர்த்துப் பண்படுத்த முடிகிறது. வேறொன்று, இளமையில் பழகும் பல திற இளைஞர்களுக்கு இடையே, எப்படியோ நல்ல இளைஞர் ஒருவர் இருவரின் தொடர்பும் நட்பும் அமைந்து, அந்தத் தொடர்பாலும் நட்பாலும் வழுக்கி விழாமல் முன்னேற முடிகிறது.

இப்படி ஒரு சிலர் முன்னேறுவது போதாது. இளைஞர்களில் பலரும பண்பும் திறனும் உடையவர்களாக வளர்ந்து முன்னேற வேண்டும். அதற்கு உரிய வழிவகை என்ன?.

பெருஞ் செலவில் கல்விக் கூடங்களும் நூல் நிலையங்களும் அமைந்திருப்பதாலும், பத்திரிகைப் படக்காட்சி வானொலி முதலியவை எளிதில் எட்டுவதாலும், அறிவுப்பசிக்குக் குறைவு இல்லை. எப்படியோ பலர் பல வழியில் அறிவை வளர்த்துக் கொள்ள முடிகிறது அவர்களிலும் சிலர் அறிவை வளர்க்கும் ஆசை இருந்தும், காலத்தை வேறு துறையில் செலவிட்டும்; நெறியோடு, நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்காமலும, மனம் போன போக்கில் சுவைமிகுந்தவற்றை மட்டும் கற்று, மற்றவற்றைப் புறக்கணித்தும், கல்வித் துறையிலும் பிற்போக்கு அடைகின்றனர் முறையாக அறிவை வளர்க்காமல் பின் தங்குகின்றனர். அவர்களின் மனம் அவர்களுக்குத் துணையாக இருந்து முயறசியை நெறிப்படுத்தி யிருந்தால், அவர்களும் முன்னேற முடியும் எனலாம்.

உடல் வளர்ச்சியிலும்

உடல் வளர்ச்சியிலும் இத்தகைய குறை பலரிடையே உள்ளது. பெற்றோர் அன்பாகச் சொல்லி வற்புறுத்தியும், உடலுக்கு நல்லவற்றை உண்ணாமல் நாவிற்குச் சுவையானவற்றை மட்டுமே உண்ணும் மக்கள் உள்ளனர். மருத்துவர்கள் சத்துப் பொருள்கள் இன்ன இன்ன என்று பாகுபாடு செய்து கூறியும் அவற்றை நாடி உண்ணாமல், நோய் வரும் வரையில் விட்டு நோய் வந்த பின் மருந்துகளை உண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்வோரும் உண்டு. இவர்களின் குறைக்கெல்லாம் காரணம் தம் மனத்தைத் தம் வசமாக வைத்து ஆளத் தெரியாத தன்மையே ஆகும். உடம்புக்குத் தீமையானது என்று தெரிந்தும், தீய பழக்கத்தையும் தீய காமச் சிந்தனையையும் நீக்கத் தெரியாமல் கெடும் இளைஞர்களின் வாழ்க்கையிலும் இந்தக்குறையே

காணலாம். வெப்பம் மிகுந்த இந்த நாட்டுக்குப் பொருந்தாதது என்று பலரும் எடுத்துரைத்த போதிலும் அறிவால் அதைத் தெளிந்த போதிலும், புகை பிடித்தல் முதலியவற்றை விட முடியாமல் வருந்திக் கேடு பலவற்றிறகு ஆளாகும் இளைஞர்களின் வாழ்க்கையிலும் இந்தக் குறையைக் காணலாம். உள்ளத்தை ஆளத் தெரியாத இந்தக் குறையால் உடம்பையும் காத்துக் கொள்ள முடியாமல் அவர்கள் வருந்துகிறார்கள்; அறிவையும் குறையாக வளர்த்து முன்னேற முடியாமல் வருந்துகிறார்கள்.

மனக்காவல் முதன்மையானது

ஆகையால் இனி இளைஞர்களுக்குத் தெளிவாக அறிவுறுத்த வேண்டிய உண்மை ஒன்று உள்ளது. உடம்பு உள்ளம் அறிவு மூன்றையும் ஒருங்கே வளர்ப்பது கடமை என்பதை அறிவுறுத்தவேண்டும். உள்ளத்தை ஆளத் தெரியாதவர்களுக்கு உடம்பையும் நன்றாக வளர்க்க முடியாது; அறிவையும் முறையாகக் கற்று முன்னேற முடியாது. ஆகவே, உடம்பை வளர்ப்பதைவிட, அறிவை வளர்ப்பதைவிட மனத்தைக்காத்து நெறிப்படுத்தி வளர்ப்பது முதன்மையானது என்பதை வற்புறுத்த வேண்டும்.

எவ்வளவோ நூல்கள் படித்தும். எளிதில் பிறருடைய வஞ்சனைக்கு ஆளாகின்றவர்களாகி, ஏமாந்து போகிறவர்களாகி வாழ்க்கையில் கலங்கி அழிகின்ற இளைஞர்கள் உண்டு. எவ்வளவோ கற்று பட்டம் பெற்றும், சிறு துன்பத்தையும் தாங்க முடியாமல் நொந்து சோர்ந்து கெடுகின்றவர்களும் உண்டு. திடீரென்று ஏற்படும் ஏமாற்றத்தையோ தீமையையோ கடந்துபோக முடியாமல், தற்கொலை செய்து கொண்டு மடிகின்றவர்களும் உண்டு. தாங்கள் எவ்வளவோ வெறுத்தும் விட்டொழிக்க முடியாமல். தீய பழக்கங்களுக்கு இரையாகிக் கெடுகின்றவர்களும் உண்டு. இவர்களை எல்லாம் காப்பாற்ற இந்த அறிவுறுத்தலைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை. அவர்கள் அறிவாலும் உடம்பாலும் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தும், மெலிந்த மனமும், நோயுற்ற மனமும் உடையவர்களாக இருப்பதில் பயன் இல்லை என்று உணரச்செய்ய வேண்டும்.

நல்லாரைக் காண்பது எங்ஙனம் ?

நல்ல உடல் நலத்தோடு வாழ்பவர்களைக் கண்ணால் கண்டு இளைஞர்கள் நன்மை உணர்கிறார்கள். அறிவில் சிறந்து விளங்குகின்றவர்களையும் அவர்களின் பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் கண்டு உணர்கிறார்கள். ஆகவே உடல் நலம் காக்கும் கடமையையும், அறிவையும் வளர்க்கும் கடமையையும் இளைஞர்களுக்கு வற்புறுத்துவது எளிதாகின்றது. ஆனால் மனநலத்

தோடு வாழ்கின்றவர்களைக் கண்ணால் கண்டு அறிவது எப்படி? அவர்கள் இன்னார் இன்னார் என்று சுட்டிக்காட்டித் தெரிவிப்பது எப்படி?

உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கச் செய்து அவற்றில் உள்ள மன நலத்தின் சிறப்பை எடுத்துக்காட்டலாம். இதைப் பெற்றோர்களும் காட்டலாம்; ஆசிரியர்களும் காட்டலாம்.

நம்பிக்கை

ஆனால், அதில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமே. அவ்வாறு நம்பிக்கை ஏற்படாதவாறு இன்றைய சூழ்நிலை தடுக்கிறது. மன நலத்தைப் பற்றிக் கற்காமல் கவலைப்படாமல் இன்று பலர் முன்னேறுகிறார்கள்; அவர்களின் வாழ்க்கையை இளைஞர்கள் பார்க்கிறார்கள் தாங்களும் அவர்களைப்போல் மனம் போன போக்காய் வாழ்ந்து முன்னேறலாம் என்று தவறாகக் கருதுகிறார்கள்

அப்போது என்ன செய்வது? புலனடக்கம் ஓர் உயர்ந்த திறமை என்று அறிவுறுத்தலாம். உலகத்தை— சுற்றுப்புறத்தை – வெல்கின்றவனை விட, உள்ளத்தை வெல்கின்றவனே பெரிய வீரன் என்று தெளிவுறுத்தலாம் இன்பமும் துன்பமும் உள்ளத்தையொட்டியே பெரும்பாலும் அமைகின்றன என்பதை விளக்கி அதனால், உள்ளத்தைப் பண்படுத்தி வளர்த்தல் நல்லது என்பதை விளக்கலாம்.

புலனடக்கப் பெருமை

இவை எல்லாவற்றையும் விட முதன்மையாக அறிவுறுத்த வேண்டியது ஒன்று உண்டு. அது என்ன? வாழ்க்கையில் அமைதியாக இன்பமாக வாழ்வதே வெற்றியாக நிறைவேறிய வாழ்க்கை என்பதையும், புலனடக்கம் உள்ளவர்களே அவ்வாறு நிறை வாழ்க்கை வாழ முடியும் என்பதையும் விளக்க வேண்டும். அதற்கு மாறாகப் புலனடக்கம் இல்லாதவர் வெற்றி பெற்றார் என்றால், அது இயற்கைக்கு மாறாக எதிர்பாராமல் நிகழும் ஒன்று என்று விளக்கவேண்டும். இந்த இருவகை விளக்கத்திற்கும் துணையாக வாழ்க்கை வரலாறுகளைச் சான்று காட்டவேண்டும். இன்று உள்ள பெருமக்களின் வாழ்க்கையையும் கயவர்களின் வாழ்க்கையையும் எடுத்துக் காட்ட வேண்டும். வாழ்க்கையில் பொதுவாக — பெரும்பான்மையாக நடப்பதையே நம்பவேண்டும் என்றும் விதிவிலக்காகச் சிறுபான்மையாக நடப்பதைப் பார்த்து மயங்கக்கூடாது என்றும் வற்புறுத்த வேண்டும்.

நல்வாழ்வுக்குள்ள ஒரே வழி

புலனடக்கம் என்றதும், நாட்டையும் வீட்டையும் துறந்து காட்டிற்குச் சென்று தவம் செய்பவர்களுக்கே உரியது என்ற தவறான கருத்தையும் போக்கவேண்டும். இந்த உலகத்தில் மனைவி மக்களோடு குடும்பமாக வாழும்

வாழ்விற்கும் புலனடக்கம் வேண்டும். பறவைகளும் விலங்குகளும் நன்றாக வாழ்வதற்குக் காரணம், அவை இயற்கை ஏற்படுத்திய முறைப்படியே வாழ்கின்றன. அந்த எல்லையைக் கடக்க முடியாமல், அவற்றின் வாழ்விற்கு வேண்டிய புலனடக்கம் இயல்பாக உள்ளன. மனிதர்க்கோ இயற்கை மிக்க உரிமையைக் கொடுத்து, "கெட்டால் கெட்டுப்போ; பிறகு துன்புற்றுத் திருந்து" என்று விட்டிருக்கிறது. ஆகவே உரிமை பெற்ற மனித வாழ்வுக்குப் புலனடக்கம் கட்டாயம் வேண்டும். இவ்வாறு குடும்பத்திலும் கல்விக் கூடத்திலும் நல்லுணர்வு பெற்றால், இளைஞர் வழுக்கிவிழ இடமிருக்காது.

புலனடக்கம் என்றதும், புலன்களை எல்லாம் பட்டினி போட்டு ஒடுக்குவது என்று உணர்தலும் கூடாது. ஐந்து புலன்களையும் பண்படுத்தி மனம் வளரவேண்டும். ஆனால் புலன்களுக்கு அடிமையாய் அலையக்கூடாது. புலன்கள் கலையெடுக்க வொட்டாமல் அவற்றை ஒடுக்கி நசுக்குதலும் கூடாது. புலன் ஒடுக்கம் வேறு; புலன் அடக்கம் வேறு. முன்னது இயற்கைக்கு மாறானது. பின்னது இயற்கையோடு இயைந்தது. உள்ளத்தைக் காப்பதற்கு— மன நலத்தை வளர்ப்பதற்கு— புலனடக்கம் மிகத் தேவையானது என்பதை இளைஞர் நெஞ்சம் நம்புமாறு செய்யவேண்டும்.

—"தினமணி"

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

சிறுகதை :

ஞானியர் அன்பளிப்பு

(ஓ ஹென்றி)

இருந்ததெல்லாம் ஒரு டாலரும் எண்பத்தேழு சதமுந்தான். அதிலும் அறுபது சதம் சிறு சிறு செப்புக்காசுகளாகவே இருந்தது. இவை யெல்லாம் காய்கறிக் கடையிலும் பல சரக்குக் கடையிலும் மல்லுக்கு நின்று பேரம் பேசிச் சிறுகச் சிறுகச் சேர்த்த சிறுவாடு. ஒரு தரம் எண்ணினாள். இரு தரம் எண்ணினாள். மூன்றாவது தரமும் எண்ணிப் பார்த்தாள், டெல்லா. ஒரு டாலர் எண்பத்தேழு சதந்தான். கூடுதல் இல்லை. நாளைக்கோ கிறிஸ்மஸ். என்ன செய்வாள் டெல்லா. முகத்தைக் கையால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். வாழ்க்கையே அழுகையும் உவகையும் பின்னிக் கிடப்பதுதான்; அதிலும் அழுகையே அதிகமாக இருக்கும்.

டெல்லா குடியிருப்பது ஒரு பழைய கட்டடத்தின் ஒரு சிறிய பகுதி. வாடகை வாரத்துக்கு எட்டு டாலர். வீடு, வீடு என்று சொல்ல முடியாது. ஆண்டிகள் தங்கும் சத்திரம்கூட அகன்றதாக இருக்கும்.

டெல்லா இருந்த பகுதி மேல் மாடியில் இருந்தது. கீழேயிருந்து மேலே வர விரும்புவோர் தங்கள் வரவைத் தெரிவிப்பதற்காக மின்சார மணி ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் அது ஒரு நாளும் அடித்ததில்லை; அடிக்கவும் அடிக்காது. ஜேம்ஸ் டில்லிங்காம் யங் என்று பெயர் தாங்கிய சீட்டு ஒன்று முன் வாசலில் ஒட்டியிருந்தது. அது மழையில் அடிபட்டு அழிந்துவிடும் நிலைக்கு வந்துவிட்டது. திருமதி ஜேம்ஸ் டில்லிங்காம் யங் என்பவர்களைத் தாம் முன்பு டெல்லா என்று குறிப்பிட்டது.

அழுதவள் எழுந்தாள்; கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே நோக்கினாள். நாளைக்கோ கிறிஸ்மஸ். கணவருக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு என்ன வாங்குவது? இருப்பதெல்லாம் ஒரு டாலர் எண்பத்தேழு சதந்தானே என்று ஏங்கினாள். மாதக் கணக்காய் மீதம் பிடித்தும் கிடைத்த பலன் இதுவே. எண்ணி எண்ணிச் செலவு செய்தாலும் செலவுதான் அதிகமாகும் என்பது எங்கும் பொதுவான ஒரு விதி போலும். தம் அருமைக் கணவருக்கு என்ன வாங்கிக் கொடுக்கலாம் என்று ஏங்கினாள் டெல்லா. ஒரு டாலர் எண்பத்தேழு சதத்தில் என்னத்தை வாங்கிக் கொடுக்க முடியும்? கணவரின் தகுதிக்கு ஏற்றதாக இருக்கவேண்டாமா?

ஜன்னலின் அருகே சிறிய

கண்ணாடி ஒன்று இருந்தது. முகம் பார்க்கும் கண்ணாடிதான். அதில் தன் முகத்தைப் பார்த்தாள். கண் ஒளி குன்றவேயில்லை. முகம் மட்டும் வெளுத்துப்போயிருந்தது. தன்னுடைய தலைமுடியை அவிழ்த்துவிட்டாள். நீண்ட அக்கூந்தல் சுருள் சுருளாய்த் தோள்மேல் விழுந்து ஒழுகியது.

டெல்லாவும் அவள் கணவனும் பெருமையாய்க் கொண்டாடும் பொருள்கள் இரண்டு. ஒன்று கணவனின் தங்கப் பைக் கடிகாரம். மற்றது மனைவியின் அழகிய கூந்தல். அவன் பைக் கடிகாரம் தந்தை பாட்டன் என்று மூன்று தலைமுறையாக வழி வழியாக வருவது. புகழ் பெற்ற அரசிகளுக்கும் தனது கூந்தல் அழகு இருந்ததில்லை என்பது டெல்லாவின் பெருமை; மன்னாதி மன்னர்களுக்கும் தனது தங்கப்பைக் கடிகாரம் போல் ஒன்று கிடைத்ததில்லை என்பது அவன் பெருமை.

தனது கூந்தலழகைக் கண்ணாடியிலே கண்டாள். அது அவள் முழந்தாளுக்கும் கீழாக நிலந் தொடுவது போல் நீண்டு தொங்கியது. ஆடைபோல் பரவி அவளை மூடியது. சரி என்று உடனே அவசர அவசரமாகக் கூந்தலை எடுத்து முடிந்து கொண்டாள். இடையில் ஏதோ நினைத்தவள் போல் தயங்கினாள்; தயங்கிய கண்ணீர்த் துளி ஒன்று நிலத்தில் வீழ்ந்து தெறித்தது.

வெளியே உடுத்திச் செல்லும் ஆடையைவிரைவில்உடுத்தினாள்; உடனே புறப்பட்டாள். நேரே ஒரு கடையண்டை வந்தாள். "எல்லா வகையான முடிகளும் வாங்கப்படும்" என்று தெரிவித்தது கடையின் முகப்பு. உள்ளே நுழைந்தாள் டெல்லா. கடை முதலாளி ஓர் அம்மாள். "என்னுடைய கூந்தலுக்கு என்ன விலை?" என்றாள் டெல்லா. அவிழ்த்து விட்ட கூந்தலை அநுபவமுள்ள கையால் தொட்டுப் பார்த்த அம்மாள் "இருபது டாலர் தருகிறேன்" என்றாள். "உம். சீக்கிரம்" என்று வாங்கிக்கொண்டு வெளியே வந்தாள் ஆர்வமுள்ள நங்கை.

அடுத்த இரண்டு மணிநேரமும் இரண்டு வினாடிகள் போல் இன்பமாய்ப் பறந்தன. கடைகள் பல ஏறி யிறங்கினாள்; கடைசியில் கண்டுபிடித்தாள் தன் கணவனுக்கேற்ற பொருளை.

இதுவே தன் கணவருக்கு ஏற்றது; இது அவருக்கே செய்தது என்பதில் அவளுக்கு ஐயம் சிறிதும் இல்லை. இதைப்போல் ஒன்று வேறு ஒரு கடையிலும் இல்லை என்பதையும் அவள் அறிவாள். தம் கணவருக் கேற்ற கடிகாரச் சங்கிலி, பிளாட்டினச் சங்கிலி, கைக்குப் பளுவான நல்லசங்கிலி, வெறும் நுரைநாட்டிய வேலைகள் நிறைந்த ஏமாற்றுவித்தை அல்ல என்று பூரித்தாள். கணவர் வைத்திருந்த கடிகாரத்துக்கும் பொருத்தமான சங்கிலியே.

பார்த்தவுடனே இதுதான் தேடியது என்று கண்டு கொண்டாள் டெல்லா.

அச் சங்கிலிக்காக அவளிடமிருந்து இருபத்தோரு டாலர்கள் கேட்டார் கடைக்காரர். எண்பத்தேழு சதத்தோடு சங்கிலியையும் பத்திரமாக எடுத்துக் கொண்டு வீடு திரும்பினாள் அவள். இனிமேல் அவள் கணவர் தம் கடிகாரத்தில் மணி பார்க்குமுன் சுற்றும் முற்றும் பார்க்கவேண்டியதில்லை. பழைய தோல்பட்டைக்கு முழுக்குப் போட்டு விடலாம்.

வீட்டுக்கு வந்ததும் டெல்லா ஆர அமர வேலை செய்யத்தொடங்கினாள். அன்பும் கொடை மடமும் சேர்ந்துகுறைத்துக் கெடுத்த தன் தலை முடியை முறையாகச் சீவி ஒழுங்காக வைக்கத் தொடங்கினாள். முன்னைய வேலைகளையெல்லாம் விட இதுவே மா பெரும் வேலையாயிற்று.

குறைபட்ட தலைமுடியை மிகப் பாடுபட்டு ஒழுங்காகச் சீவி அழகுபடுத்த முயன்றாள் டெல்லா. முக்கால் மணி நேரம் இதற்காகத் தீர்ந்தது. பள்ளிக்கூடம் போகாமல் ஒளிந்து திரியும் பையன் முகம்போல இருந்தது இப்போது டெல்லாவின் முகம். முகக் கண்ணாடியில் தன்னுருவை நெடுநேரம் நோக்கினாள் அவள்.

“பார்த்தால் கொன்று போடுவார். இரக்கமாய் விட்டு வைத்தால் என்னை எவளுக்கு ஒப்பிடுவாரோ? இருந்தாலும் நான் வேறென்ன செய்வேன்?—ஒரு டாலர் எண்பத்தேழு சதத்தைக் கொண்டு நான் என்ன செய்வேன்?” என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

மணி ஏழு அடித்தது. தேநீர் போட்டுத் தயாராக வைத்தாள்.

கணவர் ஒரு நாளும் பிந்தி வருவதில்லை. அவருக்கு ஆசையாய் வாங்கி வந்த சங்கிலியை அங்கையில் வைத்து இறுக்கி மூடிக்கொண்டு வாசலை ஆவலோடு பார்த்தவண்ணமாய் இருந்தாள். காலடிச் சத்தம் கேட்ட இவள் முகம் ஒரு கணம் வெளுத்தது. அன்றாடக் காரியங்களில் அப்போதைக்கப்போது சிறு ஜெபம் செய்வது டெல்லாவின் வழக்கம். இப்போதும் ஒருசின்ன ஜபம் செய்துகொண்டு அவர் வரவை எதிர்நோக்கினாள். கதவு திறந்தது; அவர் உள்ளே நுழைந்தார். இன்றைக்கு அவர் புதியதாய் இளைத்திருந்தது போல் அவளுக்குத் தோன்றியது; என்றும்போல் இல்லாமல் இன்று ஏதோ சிந்தனை தேங்கிய முகமாக விளங்கினார்.

கதவைச் சாத்திக் கொண்டு கணவர் உள்ளே வந்தார். தன்னை உற்று நோக்கிய அவர் கண்களில் இருந்த குறிப்பை டெல்லாவினால் அறிந்து கொள்ள இயலவில்லை. அவள் அஞ்சி விட்டாள். அப்பார்வையில் சீற்றமும் இல்லை, வியப்பும் இல்லை; பிணக்கமும்

இல்லை; நடுக்கமும் இல்லை; அவள் எண்ணிய உணர்ச்சி எதுவும் இல்லை வைத்த கண் எடுக்காமல் அவர் தன்னைப் பார்ப்பது மட்டுந் தான் அவளுக்குத் தெரிந்தது.

அவளால் தாங்க முடியவில்லை.

"ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? நாளைக்குக் கிறிஸ்மஸ் ஒரு நல்ல வார்த்தை சொல்லுங்கள். உங்களுக்குக் கிறிஸ்மஸுக்காகக் கொடுக்க வேண்டுமென்று தான் என் தலைமுடியை விற்றேன். அது வளர்ந்துவிடும். என் கூந்தல் எவ்வளவு வேகமாக வளர்கிறது என்று நீங்களே சொல்லுவீர்களே கிறிஸ்மஸுக்காக ஒரு நல்ல வார்த்தை சொல்லுங்கள். உங்களுக்குக் கொடுப்பதற்கு என்ன அருமையான பரிசு வைத்திருக்கிறேன் என்று தெரிந்தால்"

"தலைமுடியை வெட்டி விட்டாயா?" என்றுதான் கேட்டான் அவன் இவ்வளவு நேரம் நோக்கியும் எதிரிலிருந்த இந்த உண்மை இன்னும் அவன உணர்வில் ஏறவில்லை போலும்!

"வெட்டி, விற்றுவிட்டேன். தலைமுடி யிழந்தாலும் நான் உங்கள் மனைவிதானே?" என்று கேட்டு அவனை நோக்கினாள் டெல்லா.

அவன் இந்த இடத்தைச் சுற்று முற்றும் பார்த்தான்.

"தலைமுடியெல்லாம் வெட்டி விற்றாயிற்று என்றா சொல்லுகிறாய்" என்று மீண்டும் கேட்டான்.

"அதை நீங்கள் இங்கு தேட வேண்டாம். உங்களுக்காகத் தான் செய்திருக்கிறேன். நாளைக் குக் கிறிஸ்மஸ். நல்ல வார்த்தை தான் பேசுங்களேன்; எனது தலையின் முடிகள் எல்லாம் எண்ணிக் கணக்கு வைக்கப்பட்டன போலும். ஆனால் உங்கள் மீது எனக்குள்ள அன்பை மட்டும் யாராலும் கணக்கிட முடியாது. தேநீர் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள் டெல்லா.

மயக்கம் தெளிந்தவன் போல் மாறினான் அவன். மனைவிமேல் இருந்த மாறாத அன்பை அவன் புலப்படுத்தினான்.

அவனுக்குக் கிடைக்கும் கூலி வாரத்திற்கு எட்டு டாலர்தான். எட்டு டாலரானால் என்ன, எண் பதினாயிரம் டாலர் ஆனால் என்ன? இரண்டுக்கும் வித்தியாசம் இவ்வளவு என்று கணக்குப் புலிகள் கணக்குத் தீர்த்துச் சொல்லி விடலாம். அவர்கள் சொல்வதை நம்பாதீர்கள்.

டெல்லாவின் கணவன் தனது பைக்குள் கையைவிட்டு ஒரு பொட்டலத்தை வெளியிலெடுத்து டெல்லாவின் முன் வைத்தான்.

"நீ தலைமுடியை வெட்டிக் கொள்வதற்கு எனக்குத் தடையில்லை, டெல்லா. முடி குறைந்ததனால் என் அன்பு குறைந்து விடாது இதற்குள் என்ன இருக்கிறது என்று பார். அப்போது தெரியும் ஏன் நான் இப்படி விழித்தேன் என்று" என்றான் அவன்.

சுற்றியிருந்த நூல், தாள் எல்லாம் பிரிந்தன; கண்டாள் டெல்லா. இன்பத்தால் துள்ளிக் குதித்தாள். ஆனந்தக் கண்ணீரும் உகுத்தாள். அவனும் தன் ஆற்றலெல்லாம் கூட்டி ஆறுதல் மொழிகள் சொல்ல வேண்டியவன் ஆனான்.

முன்பு ஒருநாள் டெல்லா தன் கணவனுடன் கடைத்தெருவில் சுற்றி வரும்போது ஒரு கடையில் அவள் கண்டு வாங்க ஆசைப்பட்ட விலையுயர்ந்த சீப்புகள் இப்போது அவள் முன்பு கிடந்தன. அழகிய அச் சீப்புக்கள் கூந்தலில் இருபுறமும் பின் புறமும் மதிப்பாகச் செருகிச் சீர்ப்படுத்தும் சீப்புகள்; ஆமை ஓட்டில் செய்த இவ்வழகான சீப்புக்கள் ஓரமெல்லாம் கற்கள் பதித்துப் பளபள வென்று கண்ணைப் பறித்துக்கொண்டு கிடந்தன. அன்று அவற்றை அவள் கடையில் கண்டபோது, இவை தனக்கு எங்கே கிடைக்கப் போகின்றன என்று நினைத்து நீங்கி விட்டாள். இன்று அவை இங்கு அவளுக்கே என வந்து கிடைக்கப் பெற்றாள்; ஆனால் அவற்றைச் செருகி அழகு பெறவேண்டிய தலை முடி தான் இல்லை.

சீப்புக்களை மார்போடு அணைத்துக் கொண்டாள். "என் தலை வேகமாக வளர்ந்துவிடும்" என்றாள் டெல்லா.

அதன்பின், கணவனுக்குத் தான் வாங்கி வந்திருந்த அரும்பொருளை அவள் தன் கையில் வைத்தபடி அவனுக்குக் காட்டினாள். அதனுடைய பள பளப்பு அவளுடைய உள்ளத்து ஆர்வத்தை அவனுக்கு உணர்த்திற்று.

"எப்படியிருக்கிறது இது? இதற்காக நான் எத்தனைக் கடைகள் ஏறி இறங்கினேன் தெரியுமா? எங்கே உங்கள் கடிகாரத்தைக் காட்டுங்கள். இரண்டும் எப்படிப் பொருந்துகின்றன என்று பார்ப்போம்" என்றாள்.

அவனோ கையை நீட்டிக்கடிகாரத்தை அவிழ்க்க விடவில்லை; காலை நீட்டிக் கட்டிலில் படுத்துக் கொண்டு கையையும் தலைக்குப் பின்னே வைத்துமறைத்துக் கொண்டான். அவன் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது.

"டெல்லா, நம்முடைய கிறிஸ்மஸ் பரிசுகளைச் சற்று மறந்து விடுவோம். இப்போது அவற்றை உபயோகிக்க முடியாது. உனக்குச் சீப்பு வாங்குவதற்காக என் கடிகாரத்தை விற்றுவிட்டேன். சாப்பாட்டு வேலையைப் பார்க்கலாமா?" என்றான்.

அன்று கிறிஸ்து என்ற குழந்தைக்கு ஞானியர் கொண்டுவந்து கொடுத்த காணிக்கை நினைவிருக்கலாம். கிறிஸ்து பிறப்பு விழாவில் பரிசளிக்கும் வழக்கத்தைத் தோற்றுவித்த மகான்கள் அவர்களே. அறிவிற் சிறந்த அப்பெரியோர் கொண்டு வந்த காணிக்கைப் பொருள்களும் எளிமையும்

(50-ம் பக்கம் பார்க்க)

கல்வித் துறைச் செய்திகள்

பள்ளி வகுப்புத் தேர்வுகள்

— —

தலைமை ஆசிரியர்களுக்கு இலாகா உத்திரவு

———

கண்டிப்பான கோட்பாடுகள் வகுக்க வேண்டும்

— —

ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கு மாற்றும் விஷயத்தில், ஆசிரியர்கள் குழுவை யோசனை கலந்து தலைமை ஆசிரியர்கள் திட்டவட்டமான கோட்பாடுகளை வகுக்க வேண்டும். இக் கோட்பாடுகளைக்கண்டிப்பாகவும், பாரபட்சமில்லாமலும் நிறை வேற்ற வேண்டும்.

சென்னைக் கல்வி விதிகளில் இவ்வகையில் செய்யப்பட்ட திருத்தமொன்று அரசாங்க கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பென்ஷனர்கள் குழந்தைகட்கும் கல்விச் சலுகைகள்

———

ராஜ்ய சர்க்கார்களுக்கு டில்லி யோசனை

தற்போதுள்ள ராஜ்ய சர்க்கார் ஊழியர் குழந்தைகளுக்குக் கிடைக்கும் கல்விச் சலுகைகளை ரிடையரான சர்க்கார் ஊழியர் குழந்தைகளுக்கும் வழங்குவது பற்றி யோசிக்குமாறு யூனியன் சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்கு எழுதியுள்ளது.

பாரத பென்ஷனர்கள் சமாஜத்தின் கோரிக்கைக்கு இணங்க யூனியன் சர்க்கார் இந்தக் கடிதம் எழுதியுள்ளது.

குறைந்த பென்ஷன் வாங்குவோரின் குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் சேவையிலிருந்த காலத்தில் கிடைத்து வந்த அதே கல்விச் சலுகைகள் கிடைக்க வேண்டும் என்பது சமாஜத்தின் கோரிக்கை.

குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் சர்க்கார் ஊழியரின் குழந்தைகளுக்கு உள்ள அனுகூலங்கள் பென்ஷனர் குழந்தைகட்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கொஞ்ச காலத்துக்கு முன் பிரதம மந்திரி உள்துறை மந்திரிக்கு எழுதியிருந்தார்.

எனினும், சிலாக மத்திய சர்க்கார் ஊழியரின் குழந்தைகளுக்கு மட்டும்தான் கல்விச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன வென்று யூனியன் உள்துறை மந்திராலயம் சமாஜத் தலைவருக்குத் தெரிவித்திருந்தது. மாற்றக் கூடிய பதவிகளில் அல்லது கல்விவசதி இல்

லாத இடங்களில் வேலை செய்பவர்கள் போன்றோருக்கு இந்தச் சலுகைகள் விசேஷமாக அளிக்கப்படுவதாக அதில் கூறப்பட்டிருக்கிறது.

11 வருஷ கல்வி முறை: மந்திரி, டைரக்டர் விளக்கம்

மாணவர்கள் அட்மிஷன் விஷயத்தில் முதல்வருக்கே இறுதி அதிகாரம்

மாற்றியமைக்கப்பட்ட கல்வி முறையின்கீழ் 11வருஷப் படிப்பிலிருந்து மாறுதல் எதுவும் இராது என்று கல்வி மந்திரி திரு. எம். பக்தவத்ஸலம் நிருபர்களிடம் கூறினார்.

பத்திரிகைகளில் பெற்றோர்கள் தெரிவித்துள்ள சந்தேகங்களைக் குறிப்பிட்டு மந்திரி மேற்கண்டவாறு கூறினார். எந்த மாணவரும் 11 வருஷத்துக்கு மேல் பள்ளிக்கூடத்தில் படிக்கும்படி கட்டாயப்படுத்த மாட்டார் என்றும், அதே சமயத்தில் எந்த மாணவரும் 10 வருஷப் படிப்புடன் படிப்பைப் பூர்த்தி செய்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

மந்திரியுடனிருந்த கல்வி இலாகா டைரக்டர் திரு. என்.டி. சுந்தரவடிவேலு, 7வது வகுப்பு மாணவனொருவன் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 9வது வகுப்புக்கு "புரொமோஷன்" கோரும் குறிப்பிட்ட உதாரணத்தை எடுத்துக் கொண்டு, பழைய ஹையர் எலிமெண்டரி 7வது வகுப்பையும் ஹைஸ்கூல் மூன்றாவது படிவத்தையும் ஒன்றாகப் பாவிக்கக் கூடாது என்றார். ஹையர் எலிமெண்டரி பள்ளிக் கூட தரம் சற்று குறைவானது.

ஹைஸ்கூல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், நடப்பு ஆண்டில் மேலும் பள்ளிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாலும், மாணவர்கள் ஏதாவதொரு பள்ளியில் இடம் பெறுவதில் சிரமமிராது.

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பும் பொருந்தியிருந்தன. இங்கு நான் ஏழையர் இருவர் மடமையால் ஒருவருக்கொருவர் தத்தம் உடைமைகளை இழந்து இன்ப மூட்ட எண்ணிய சிறு கதை ஒன்றைத் திக்கித் திக்கிச் சொன்னேன் ஆயினும் அறிவிற் சிறந்தோர் என்று சொல்லிக் கொள்ளும் இக்காலத்து மக்களுக்கு ஒன்று கூறுவேன்; இன்று அன்பளிப்புகள் வழங்குகின்ற அனைவருள்ளும் இங்கு எடுத்துரைத்த இவ்விருவரே அறிவிற் சிறந்தோராவர். உவந்து கொடுப்போருள்ளும் மகிழ்ந்து பெறுவோருள்ளும் இவ்விருவரையும் ஒத்தவர்களே அறிவிற் சிறந்தவர்கள். எங்கும் இப்படிப்பட்டவர்களே ஞானியாவர்.

அட்மிஷன் : முதல்வருக்கே அதிகாரம்

மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் கல்வி நிலையங்களின் முதல்வருக்கே இறுதி அதிகாரம். குறிப்பிட்ட ஒரு மாணவரைச் சேர்க்கும்படி தலைமை ஆசிரியரையோ அல்லது முதல்வரையோ வற்புறுத்த நிர்வாகத்துக்கோ வேறு எவருக்குமோ உரிமை கிடையாது.

உத்திரப் பிரதேச வழக்கொன்றில் சுப்ரீம் கோர்ட் இவ்வாறு தீர்ப்பளித்திருப்பதாக திரு. சுந்தர வடிவேலு கூறினார்.

கிடைக்கக் கூடிய இடங்களை நிரப்புவதற்காக ஒருகல்விநிலையத் தலைவர் அதிக மார்க் வாங்கியுள்ள மாணவர்களைத் தாம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை குறைந்த மார்க் வாங்கியவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று விளக்கினார். குறைந்த மார்க் வாங்கியவர்களுக்கு ஊக்கம் தருவதற்காகப் பிரகாசமான மாணவர்களுடன் அவர்களையும் சேர்த்துக்கொள்வதென்று முடிவு செய்த தியாகராயர் கல்லூரி முன்னாள் பிரின்ஸிபால் காலஞ்சென்ற எம். கே. ஷண்முகத்தின் உதாரணத்தை அவர் மேற்கோள் காட்டினார்.

ஆசிரியர்களின் ஓய்வு வயதை உயர்த்த சர்க்கார் உத்தரவு

பல்வேறு வகைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களின் ஓய்வு வயதை 55-லிருந்து 58-க்கு உயர்த்துவதற்கு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (அவ்வாறு செய்வதற்கு சர்க்கார் மேற்கொண்ட முடிவு ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கிறது).

உத்தரவு கூறுவதாவது:— எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் செகண்டரிப் பள்ளிகளிலும் பயிற்சிப் பள்ளிகளிலும், விசேஷப்பள்ளிகளிலும, ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும் அவை சர்க்கார் நிர்வாகத்தில் இருந்தாலும், ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் இருந்தாலும், கல்வி இலாகாவின் அங்கீகாரம் பெற்ற தனியார் ஸ்தாபன நிர்வாகத்தில் இருந்தாலும், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள ஓய்வு பெறும் வயது 55—லிருந்து 58-க்கு உயர்த்தப்படும்.

1962 ஜூன் 1 முதல் 1963 மார்ச் 31 வரை உள்ள காலத்தில் ஓய்வு வயதை அடைந்து தற்சமயம் வேலையில் உள்ள ஆசிரியர்கள் விஷயத்திலும் இச் சலுகை பொருந்தும்.

ஏதாவது நிர்வாகத்தில் ஓய்வு வயது 58க்கு மேல் இருந்தால், ஓய்வு வயது அவர்கள் விஷயத்தில் தொடர்ந்து உயர்ந்த வயதாக இருக்கும்.

கல்லூரிகள், பாலிடெக்னிக் போன்ற தொழில் நுட்ப ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட உத்

தாவு தனியாகப் பிறப்பிக்கப்படும் என்று சர்க்கார் உத்தரவு கூறுகிறது.

ஆசிரியர்களைக் கேலி செய்யும் படங்களுக்குக் கண்டனம்

— —

தடை செய்யுமாறு கல்வி மாநாட்டின் கோரிக்கை

——

ஓய்வு வயதை 60–க்கு உயர்த்த வேண்டுகோள்

நவீன நாடகங்களிலும், படங்களிலும், விளம்பர அட்டைகளிலும் எல்லா ஆசிரியர்களையும் கேலி செய்யும் போக்கு அதிகரிப்பது கண்டு கவலை தெரிவித்து 53 வது சென்னை ராஜ்ய கல்வி மாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

கல்வித் தொழிலில் உள்ளவர்களை அவமதிக்கும் அல்லது அவர்கள் மனதைப் புண்படுத்தும் எல்லா நாடகங்களுக்கும் தடை விதிக்குமாறு சர்க்காரை மாநாடு கேட்டுக் கொண்டது.

ரூ. 150க்கு மேற்பட்ட அடிப்படைச் சம்பளம் உள்ள ஆசிரியர்களின் கிராக்கிப் படியை 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய்க்கு உயர்த்தியதற்காகச் சர்க்காருக்கு மாநாடு நன்றி தெரிவித்தது.

செகண்டரி கல்விக் காலத்தை 11 வருடமாக்க சர்க்கார் முடிவு செய்ததை மற்றொரு தீர்மானம் வரவேற்றது.

எல்லா வகுப்புகளிலும் ஹிந்தி அல்லது சம்ஸ்கிருதத்தைப் பரீட்சை பாடமாக்குமாறு சர்க்காரைத் தீர்மானம் கேட்டுக் கொண்டது தேர்வுக்குக் குறைந்த பட்ச மார்க்கு விதிக்கப்பட வேண்டும். சரித்திரம் பூகோளம் முக்கிய பாடமாக்கப்பட வேண்டும். விஞ்ஞானம், கணிதத்துடன் அது தன் பழைய அந்தஸ்தை அடைய வேண்டும் என்று தீர்மானம் கூறியது.

தனியார் ஸ்தாபனங்களில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலைப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், அவர்களுடைய உரிமைகளைக் காக்க வேண்டும் என்றும் சர்க்காரைத் தீர்மானம் கேட்டுக் கொண்டது.

எல்லா நிர்வாகத்திலும் ஹெட் மாஸ்டர்களுக்கு ஒரே விதமான சம்பள ஸ்கேல்கள் இருக்க வேண்டும் என்றும் மாணவர் எண்ணிக்கைக்கு இணங்க அலவன்ஸ் அளிக்கப்பட வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் கேட்டுக் கொண்டது.

ஆசிரியர்களின் ஓய்வு வயதை 60–க்கு உயர்த்துமாறு சர்க்காரை மாநாடு கேட்டுக்கொண்டது.

வேலை நாட்கள்

ஆதாரப் பள்ளிகளில் வருடத்துக்கு மொத்த வேலை நாட்களை 240க்குப் பதிலாக 200 ஆக நிர்ணயிக்குமாறு சர்க்காரை மாநாடு கேட்டுக் கொண்டது.

ஆசிரியர்-மாணவர்கள் விகிதம் 1:40ஆக இருக்க வேண்டும் என்ற சர்க்கார் உத்திரவை ரத்து செய்து, விகிதத்தை 1:20ஆக நிர்ணயிக்கத் தீர்மானம் கேட்டுக் கொண்டது. ஏனென்றால் லீவு ஸ்தானங்களில் புதிய ஆசிரியர்களையும், மாற்று நபர்களையும் நியமிப்பதை உத்தரவு தடுக்கிறது.

ராஜ்யம் முழுவதையும் சேர்ந்த 1500க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

செகண்டரி கல்வி, ஆரம்பக் கல்வி, கல்லூரிக் கல்வி, மாதர் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவை பற்றியும் மாநாடு விவாதித்தது.

உலகமக்கள் தொகை 311 கோடி

5 கோடி அதிகரிப்பு

இவ்வாண்டு இடையில் உலகத்தின் மக்கள் தொகை 311 கோடி 50 லட்சமாகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவனம் மேற்கண்ட தகவலை தெரிவித்தது. அந்த நிறுவனம் மக்கள் தொகை பிரச்சனைகளைப் பற்றி ஆராய ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நிறுவனத்தின் செய்தி மேலும் கூறுவதாவது:

ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை 5 கோடி அதிகரித்து வருகிறது.

அயர்லாந்து, தென் வியட்னம், கிழக்கு ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளில் சமீப ஆண்டுகளில் மக்கள் தொகை குறைந்திருக்கிறது. அந்நாடுகளிலிருந்து வேறு நாடுகளுக்கு மக்கள் குடியேறியதே இதற்கான முக்கிய காரணமாகும்.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மக்கள் தொகை அதிகரிப்பு 'அதிசயிக்கத் தக்க' அளவில் இருக்கிறது. திட்டமிட்ட அளவைவிட இந்தியாவில் 70 லட்சமும், பாகிஸ்தானில் 40 லட்சமும் மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது.

இந்த அதிகரிப்பு எதிர்பார்க்காததாகும். மிகவும் அதிகமானதுமாகும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிப்பவர்களைத் திணறடிக்கும் கடும் பிரச்னையாகும் இது.

உலக மக்கள் தொகையில் 51 சதவிகிதம் ஆசியாவிலும், 21 சதவிகிதம் ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும், 14 சதவிகிதம் அமெரிக்காவிலும், மற்றுமுள்ள 8 சதவிகிதத்தில் பெரும்பாலோர் ஆப்பிரிக்காவிலும் வாழ்கிறார்கள்.

உலக நாடுகளில் கம்யூனிஸ்டு சீனாவின் மக்கள் தொகை தான் மிக அதிகம். அதன் மக்கள் தொகை 71 கோடி 70 லட்சமாகும். அதாவது உலக மக்கள் தொகையில் 23 சதவிகிதமாகும்.

மற்றும் மக்கள் தொகை அதிகமாக உள்ள 10 நாடுகள் வருமாறு:

இந்தியா (44 கோடி 80 லட்சம்). சோவியத்யூனியன் (22 கோடி 10 லட்சம்) அமெரிக்கா (18 கோடி 70 லட்சம்) பாகிஸ்தான், இந்தோனேஷியா (தலா 9 கோடி 70 லட்சம்) ஜப்பான் (9 கோடி 50 லட்சம்). பிரேஸில் (7 கோடி 50 லட்சம்) மேற்கு ஜெர்மனி (5 கோடி 50 லட்சம்) பிரிட்டன் (5கோடி 30 லட்சம்)

மே 1 முதல் கார்டு 6 ந. பை.

புது தபால் கட்டண அமல்

புதுடில்லி, ஏப். 30 — கீழ்க் கண்டவாறு புதிய தபால் கட்டண விகிதங்கள் மே ௴ 1–ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்று தபால், தந்தி டைரக்டர் ஜெனரல் அறிவித்துள்ளார்.

லோகல் கார்டுகளுக்கு இப்போதுள்ள சலுகைக் கட்டணம் இனி கிடையாது. இனி தபால் கார்டுகளுக்கு 5 நயாபைசாவுக்குப் பதில் 6 நயா பைசா விலை. ரிப்ளை போஸ்ட் கார்டுக்கு விலை 12 நயா பைசா.

உள்நாட்டு புக், பாட்டர்ன், ஸாம்பிள் பாக்கெட்டுகளுக்கு 50 கிராம் எடைக்கு மேற்படாமல் இருந்தால் கட்டணம் 10 ந. பை. உபரியாக உள்ள ஒவ்வொரு 25 கிராம்களுக்கோ அதன் பகுதிக்கோ 5 ந.பை. கட்டணம்.

ஆனால் கீழ்க்கண்டவற்றிற்குத் தபால் கட்டணங்களில் மாறுதல் இல்லை. (1) அச்சிட்ட புத்தகங்கள் அடங்கிய புக் பாக்கெட்டுகள். (2) இந்தியாவில் பிரஸ் ரிஜிஸ்டிராரிடம் பதிவு செய்து கொள்ளப்பட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகள் அடங்கிய புக் பாக்கெட்டுகள்.

ரிஜிஸ்டிரேஷனுக்குச் சாதாரண தபால் கட்டணத்துடன் இப்போது 50 ந பை. கட்டணம். இது இனி 55 ந.பை. கட்டணமாகிறது. இது அயல்நாடுகளுக்கு அனுப்புவதற்கும் பொருந்தும். ரிஜிஸ்டர் தபாலுக்கு அக்னலெட்ஜ்மெண்ட் கட்டணம் 10 ந.பை.

ஒவ்வொரு 3 தபால்களுக்கு அல்லது அதற்குக் குறைவான தபால்களுக்கு 'சர்டிபிகேட் ஆப் போஸ்டிங்' கட்டணம் 5 ந.பை.

ரிஜிஸ்டர் செய்யாத லெட்டர் கார்டு, போஸ்ட் கார்டு, பாக்கெட் முதலியவற்றைத் தபாலில் சேர்ப்பதற்குத் தாமதக் கட்டணம் (லேட்பீ) 10 ந.பை.

'ரிஜிஸ்டர் செய்யப் பட்ட ஒவ்வொரு தபாலுக்கும் 'தாமதக் கட்டணம்' 15 ந.பை.

மற்றும் இன்ஷியூரென்ஸ் வி. பி. பி. தபால் பெட்டிகள், தபால் பைகள் முதலியவற்றிற்கும் கட்டண விகிதங்கள் மாற்றப்பட்டுள்ளன.

தந்திக் கட்டணங்கள்

சாதாரண தந்திகளுக்கு, முதல் பத்து வார்த்தைகளுக்கு ஒரு ரூபாயும், மேற்கொண்டு ஒவ்வொரு வார்த்தைக்கும் 10 ந.பை. வீதமும் வசூலிக்கப்படும். எக்ஸ்பிரஸ் தந்திகளுக்கு வழக்கம் போல் இரு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

வாழ்த்து தந்திகளுக்கு, சாதாரண தந்தியானால் முதல் பத்து வார்த்தைகளுக்கு 75 நயா பைசாவும், மேற்கொண்டு ஒவ்வொரு வார்த்தைக்கும் 10 நயா பைசா வீதமும் வசூலிக்கப்படும். எக்ஸ்பிரஸ் தந்திக்கு இரு மடங்கு கட்டணம்.

டெலிபோன் கட்டணங்கள்

கட்டண சலுகை நேரத்தில் செய்யப்படும் அவசர "கால்"களுக்கு, முழு விகிதத்துக்குப் பதிலாக 25 சத விகிதம் வசூலிக்கப்படும். "ஹைப்ரியாரிடி கால்"களுக்கு அத்தகைய குறைப்பு இராது.

பார்ஸல் கட்டணங்கள்

உள் நாட்டு பார்ஸலுக்கு. முதல் 400 கிராம் வரை 60 ந. பைசாவும் மேற்கொண்டு ஒவ்வொரு 400 கிராமுக்கும் 60 ந பைசா வீதமும் வசூலிக்கப்படும்.

புக் பாக்கெட், சாம்பிள் பாக்கெட் விஷயங்களில், 50 கிராமுக்கு 10 ந. பைசா, மேற்கொண்டு ஒவ்வொரு 25 கிராமுக்கும், அதன் பகுதிக்கும் 5 பைசா. (பத்திரிகை ரிஜிஸ்டிராரிடம் பதிவு செய்து கொள்ளப்பட்ட, அச்சிடப்பட்டுள்ள பத்தகங்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் இது பொருந்தாது. பழைய விகிதமே அமுலிலிருக்கும்)

(5?-ம் பக்கத் தொடர்ச்சி)

மூத்திரக்காயை ஒட்டவைத்து சிகிச்சை அளிக்கத் துணிந்தார்கள். சத்திர சிகிச்சை நடந்தது. ஒட்டவைத்த உறுப்பு உடலுடன் சேர்ந்து செயலாற்றிற்று. பீட்டர் [illegible] ஹாகின் உடல்நிறத் தொடங்கிவிட்டது. அதிவிரைவில் அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிவிடுவார். இம்மாதிரி ஓர் சத்திர சிகிச்சை இதுவரையில் எந்த நாட்டிலும் நடந்ததில்லை.

அறிவுக் கதிர்

கபடன், வஞ்சகன், பொய்யன், சூதாடி, திருடன், கொலைகாரன்—இவர்களெல்லாம் யார் என்று கருதுகிறீர்கள்? வாழ்க்கைப் பாதையைச் சமுதாயம் சரியானபடி அமைத்திருந்தால் இந்தப் பட்டியல் ஏற்பட்டிருக்குமா?

—அறிஞர் அண்ணாதுரை

புதிய கல்வித் திட்ட அமுல்: சர்க்கார் உத்தரவு

ஸ்டாண்டர்டுகளை மாற்றி அமைப்பதுபற்றி விளக்கம்

சென்னை, ஏப்ரல் 27—

புதுக் கல்வித் திட்டம் பற்றி இன்று சென்னை சர்க்கார் விடுத்துள்ள உத்தரவு ஒன்று, இவ் வருடம் தற்போதைய 7-ம் ஸ்டாண்டர்டிலுள்ள மாணவர் எவரையும் நிறுத்த அவசியமில்லை என்று தெரிவிக்கிறது.

உத்தரவு மேலும் கூறுவதாவது:

கல்வி சம்பந்தமான ராஜ்ய ஆலோசனைக் கமிட்டியின் வெள்ளை அறிக்கையை ராஜ்ய சட்டசபைகள் நிறைவேற்றியதை யொட்டி சர்க்கார் பின் வரும் உத்தரவை வெளியிட்டுள்ளனர்:

செகண்டரி கல்வி, ஒன்று முதல் 11 ஸ்டாண்டுடர்கள் வரையுள்ள 11 வருடகால படிப்பாகும். இது 3 பிரிவானது. 1 முதல் 5 ஸ்டாண்டர்டுகள்—பிரைமரி. 6 முதல் 8 வரை ஹையர் பிரைமரி செகண்டரி. 9 முதல் 11 ஸ்டாண்டர்டு வரை செகண்டரி 10-ம் ஸ்டாண்டர்டு முடிவில் சர்க்கார் பரீட்சை நடத்தப்படும். இது எஸ் எஸ். எல். சி. பரீட்சை எனப்படும். ஹையர் செகண்டரி படிப்பு ஏற்படுத்தப்படாது செகண்டரி கல்விக்குப் பிறகு ஒரு வருஷ பி.யு.சி. வகுப்பு உண்டு. தற்போது போல் இது கல்லூரிகளில் நடத்தப்படும். புதிய 11 வருடப் படிப்பு 1963-64 வருடப் பள்ளி ஆண்டு முதல் அமுலுக்கு வரும்.

1963-64-ல் புதிய 8-ம் ஸ்டாண்டர்டு புகுத்தப்படும்.

தற்போது 1 முதல் 6 ஸ்டாண்டர்டுகள் வரையுள்ள மாணவர்கள் 2-வது முதல் 7-வது வரையுள்ள அடுத்த ஸ்டாண்டர்டுக்குச் செல்வர். முதல் 6 ஸ்டாண்டர்டுகளில் நிறுத்தப்பட்டவர்கள், அந்தந்த ஸ்டாண்டர்டில் மேலும் ஒரு வருஷம் படிப்பர்.

தற்போது ஒருங்கிணைந்த 7ம் ஸ்டாண்டர்டில் படிக்கும் மாணவர்கள் 8-ம் ஸ்டாண்டர்டுக்குச் செல்வர்.

1963-64-ல் புகுத்தப்படும் புதிய 8-ம் ஸ்டாண்டர்டு மேல் பிரைமரி கட்டத்தின் இறுதி வகுப்பாகும். இந்தக் கட்டத்தில் சர்க்கார் பரீட்சை இருக்காது. 1963-64-ல் புதிய 8-ம் ஸ்டாண்டர்டில் பின் வரும் மாணவர்கள் இருப்பார்கள்.

(1) தற்போதைய 7-ம் ஸ்டாண்டர்டு தேறியவர்கள் அப்பர் பேசிக் கிரேடு-7 தேறியவர்கள் (2) 8-ம் ஸ்டாண்டர்டு

இ. எஸ். எல். ஸி. பரீட்சையில் தேருதவர்கள்.

1963-64-ல் புதிய 8-ம் ஸ்டாண்டர்டில் படிக்க வேண்டிய பாடத் திட்டங்கள், புத்தகங்கள் இவை ஏற்கனவே 7-ம் ஸ்டாண்டர்டில் உள்ளது போன்றதுதான். ஆகவே தற்போதைய 7-ம் ஸ்டாண்டர்டில் உள்ள மாணவர்கள் 1962-63ம் வருஷ பள்ளி ஆண்டு முடிவில் நிறுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. தற்போது ஒருங்கிணைந்த 8, 9, 10-ம் ஸ்டாண்டர்டுகள் 9, 10, 11, ஸ்டாண்டர்டுகள் என அழைக்கப்படும். தற்போதைய 8, 9 ஸ்டாண்டர்டுகளை பூர்த்தி செய்பவர்கள் புதிய 10, 11 ஸ்டாண்டர்டுகளுக்குச் செல்வர்.

1963-64-ல் புதிய 9-ம் ஸ்டாண்டர்டில் பின் வரும் மாணவர்கள் இருப்பர்.

1. 3-ம் பாரத்திலிருந்து பிரமோஷன் பெறுபவர்கள், 2. 8-ம் ஸ்டாண்டர்டு இ. எஸ். எல். ஸி. (ஆங்கில இஷ்டபாடம்) பரீட்சையில் தேறுபவர்கள் 3. சீனியர் பேசிக் ஸ்கூல் 8-ம் கிரேடு (ஆங்கில இஷ்டபாடம்) பரீட்சையில் தேறியவர்கள் 4. தற்போதைய 8-ம் ஸ்டாண்டர்டில் தேருதவர்கள். தற்போதைய 8, 9-ம் ஸ்டாண்டர்டுகளில் தேருதவர்கள் புதிய 9, 10 ஸ்டாண்டர்டுகளில் இருப்பர்.

தற்போதைய 10-ம் ஸ்டாண்டர்டு படிப்பைப் பூர்த்தி செய்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதியவர்கள் மீண்டும் பள்ளியில் படிக்க வேண்டியிருந்தால் அவர்கள் 11-ம் ஸ்டாண்டர்டில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மதுரை மாநில மாநாடு.

பல நிர்வாகிகள் ஜூன் மாதத்தில் பள்ளிகள் திறப்பதால் மாநாட்டிற்கு வர அசௌகரிமாக இருக்கும் என்றும், ஜூலை மாத கடைசியில் வைத்துக் கொண்டால் எல்லா நிர்வாகிகளும் மாநாட்டில் கலந்து கொள்ள சௌகரியமாக இருக்கும் என்றும் கேட்டுக் கொண்டதின் பேரில் 1963, ஜூலை கடைசிவாரத்தில் மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இப்படிக்கு:

பி. வீரராகவன்,

சென்னை மாநில எயிடட் பள்ளிகள்,
நிர்வாக சங்கத்தின் தலைவர்.

★ செய்திக் கொத்து ★

மயில் நமது தேசீய பறவை

இந்திய சர்க்கார் மயிலை இந்தியாவின் தேசியப் பறவையாகத் தெரிந்தெடுத்துள்ளனர். மாநில சர்க்கார்களின் கருத்துக்களையும், பத்திரிகைகளில் வெளியான கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ரூ. 50 கோடியில் கட்டிடம்

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் சுமார் 10 கோடி டாலர் (ரூ. 50 கோடி) செலவில் 59 மாடிகளைக்கொண்ட பிரம்மாண்டமான ஆபீஸ் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் உள்ள ஆபீஸ் கட்டிடங்களில் இரண்டாவது மிகப்பெரிய கட்டிடமாகும்.

இக்கட்டிடத்தில் சுமார் 25 ஆயிரம் அலுவலர்கள் வேலைபார்க்கிறார்கள். இக் கட்டிடத்தில் ஏர்கண்டிஷன் சாதனங்களை அமைப்பதற்கு மட்டும் ஒரு கோடி டாலர் செலவாகியது.

சுண்டெலிப் பால் விலை ரூ. 50,000

சுண்டெலிப் பால் கால்காலன் சுமார் ரூ. 50 ஆயிரம் ஆகிறது. இப்பாலைக் கொண்டு கொலம்பியா பல்கலைக் கழகத்தினர் புற்று நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர்.

பால் பண்ணைகளில் பால் கறக்கும் கருவிகளின் மாதிரியில் மிக நுண்ணிய அளவில் செய்யப்பட்ட கருவிகளைக் கொண்டு 20 ஆயிரம் சுண்டெலிகளிடம் பால் கறந்தனர்.

பிரிட்டிஷ் டாக்டரின் அற்புத சாதனை

லீட்ஸ் ஜெனரல் இன்பர்மரியைச் சேர்ந்த டாக்டர்கள், இறந்த மனிதனுடைய மூத்திரக் காயை உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் ஒருவருடைய உடலில் ஒட்டவைத்து அவரைக் காப்பாற்றிய செய்தி இப்போது கிடைத்திருக்கிறது.

சத்திர சிகிச்சை வெற்றிபெற்றுவிட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான் செய்தியை வெளியிடவேண்டும் என்று டாக்டர்கள் கருதியதால், இரண்டுமாத காலம் செய்தியை ரகசியமாக வைத்திருந்தார்கள்.

பீட்டர் லூகாஸின் மூத்திரக் காய்கள் செயலிழந்து விட்டன. அவர் பிழைப்பது அரிது என்று கருதப்பட்டது. லீட்ஸ் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் அவருடைய மூத்திரக்காய்களை அகற்றிவிட்டு இறந்த மனிதனுடைய உடலிருந்து எடுத்த

[55–ஆம் பக்கம் பார்க்க]

எமது
வெளியீடுகள்

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

(‘ஆரம்பக் கல்வி’ நிலையம்)

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

தபால் பெட்டி எண் 1818. *டெலிபோன் எண் 24544.*

ஆரம்பப் பள்ளிகளுக்கு......

* முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு அரசியலார் வெளியிடுகின்றனர்.

திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	*0*	*8*	*0*	*3*	*28-5 ’58*
நான்காம் வகுப்பு	*0*	*12*	*0*	*21*	*13-5-’59*
ஐந்தாம் வகுப்பு	*1*	*0*	*0*	*11*	*18-5-’60*
ஆரும் வகுப்பு	*1*	*4*	*0*	*25*	*10-5-’61*

★

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

மூன்றும் வகுப்பு	*0*	*8*	*0*	*5*	*28-5-’58*
நான்காம் வகுப்பு	*0*	*12*	*0*	*21*	*13-5-’59*
ஐந்தாம் வகுப்பு	*1*	*0*	*0*	*13*	*18-5-’60*

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்.

ஆரும் வகுப்பு	*0*	*12*	*0*	*4*	*16-5-’62*

சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

ஆசிரியர்: பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0	8	0	...	...
மூன்றாம் வகுப்பு	0	12	0	43	13-5-'59
நான்காம் வகுப்பு	0	14	0	25	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	4	0	39	15-5-'60

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B. A., L. T.

ஆறாம் வகுப்பு	1	8	0	25	10-5-'61
ஏழாம் வகுப்பு	1	12	0	13	16-5-'62

சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

இரண்டாம் வகுப்பு	0	10	0	...	...
மூன்றாம் வகுப்பு	0	12	0	...	...

ஆசிரியர்: த. சே. உமாபதி M.A., L. T.

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	1	14	0	44	13-5-'59
செங்கற்பட்டு	1	14	0	44	
வட ஆற்காடு	1	14	0	44	
தென் ஆற்காடு	1	14	0	44	
சேலம்	1	14	0	44	
கோயம்புத்தூர்	1	14	0	44	
நீலகிரி	1	14	0	46	
திருச்சிராப்பள்ளி	1	14	0	46	
தஞ்சாவூர்	1	14	0	46	
மதுரை	1	14	0	22	16-5-'62
இராமநாதபுரம்	1	14	0		
திருநெல்வேலி	1	14	0		
கன்னியாகுமரி	1	14	0		
ஐந்தாம் வகுப்பு	1	12	0	43	18-5-'60

சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், B.A., B.T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1	12	0	14	10-5-'61

ஆசிரியர் : த. சே. உமாபதி, M..,L.T.

ஏழாம் வகுப்பு	2	0	0	18	16-5-'62

★

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0	6	0	...	...
மூன்றும் வகுப்பு	0	7	0	...	...

ஆசிரியர் : M. விவேகானந்தா, B.Sc.,L.T., M.ED.

நான்காம் வகுப்பு	0	10	0	30	13-5-'59

★

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A.,L.T.

ஐந்தாம் வகுப்பு	1	4	0	26	18-5-'60

★

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A.,L.T.

ஆறும் வகுப்பு	1	8	0	30	10-5-'61

★

துணைப்பாடப் புத்தகங்கள்

சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்

ஐந்தாம் வகுப்பு	0	8	0	15	18-5-'60

நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	17	18–5–'60

★

அறிவுச் சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

ஆறும் வகுப்பு	0 10 0	10	10–5–'61

MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

VI STANDARD	0 8 0	13	10–5–'61

FOR HIGH SCHOOLS

உயர் நிலைப் பள்ளிகளுக்கு

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

	விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1 25	25	10–5–'61
எட்டாம் வகுப்பு	1·75	21	13–5–'59

★

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B.A.,L.T.,

ஆறும் வகுப்பு	1·50	28	10–5–'61
ஏழாம் வகுப்பு	1·75	13	16–5–'62

சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·75	14	10–5–'61

சமூக நூல்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5–'62
எட்டாம் வகுப்பு	2·50	35	16-5–'62

பொது விஞ்ஞானம்

ஆசிரியர்: K. LAKSHMINARAYANASAMI, B.A., L.T.

ஆறாம் வகுப்பு	1·50	30	10-5-'61

ஆசிரியர்: K. LAKSHMINARAYANASAMI, B.A., L.T.

பத்தாம் வகுப்பு	2·50	35	10-5-'61

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர்: புலவர் சொ. முருகேசனர்

ஆறாம் வகுப்பு	75	4	16-5-'62

மாணவர் இலக்கணம்

எட்டாம் வகுப்பு	0 14 0	4	29-7-'59

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

ஒன்பதாம் வகுப்பு	1 4 0	11	18-5-'60

த. சே. உமாபதி, M.A., L.T.

பத்தாம் வகுப்பு	1 8 0	31	10-5-'61

ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj.

Mother India Supplementary Reader VI Std.	0 8 0	13	10-5-'61
Mother " " " III Form	0 10 0	24	10-5-'61

TAMIL NON-DETAILED

அறிவுச் சுடர் (ஆறும் வகுப்பு)	0 10 0	10	10-5-'61
நாடும் மக்களும்	1 0 0	17	18-5-'60
தொண்டை நாட்டு மன்னர்	1 0 0	19	18-5-'60
பூம்புகார்	0 14 0	R.C.No. 9	15-3-'61
திரு. வி. க.	0 14 0	23	13-5-'59

ஆசிரியர்: லீலா பார்த்தசாரதி, B.A., B.T.,

கணிதம் கற்பிக்கும் முறை	2·00	2	5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.

ஆரும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.
எட்டாம் வகுப்பு	1·25 ந. பை.
ஒன்பதாம் வகுப்பு	1·25 ந. பை.
பத்தாம் வகுப்பு	1·50 ந. பை.

FOR ELEMENTARY SCHOOLS

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	0·75 ந. பை.
செங்கற்பட்டு	0·75 ந. பை.
வட ஆற்காடு	0·75 ந. பை.
தென் ஆற்காடு	0·75 ந. பை.
சேலம்	0·75 ந. பை.
கோயம்புத்தூர்	0·75 ந. பை.
நீலகிரி	0·75 ந. பை.
திருச்சிராப்பள்ளி	0·75 ந. பை.
தஞ்சாவூர்	0·75 ந. பை.
மதுரை	0·75 ந. பை.
இராமநாதபுரம்	0·75 ந. பை.
திருநெல்வேலி	0·75 ந. பை.
கன்னியாகுமரி	0·75 ந. பை.
ஐந்தாம் வகுப்பு	0·94 ந. பை.
ஆரும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

பாடப் பயிற்சி திறவு கோல்
(Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனாமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு எட்டணா (50 ந. பை.) பிரதிக்கு வீதம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

★ படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள்!
★ நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள்!!
இதோ
பைந்தமிழ் எழுத்தாளர்
திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்
தீட்டிய
அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில் வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

	ரூ.	காசு
1. வெண்ணிலா	1	50

தன் அண்ணனைத் திருத்தியதுடன் நன்கொடையென்றால் நானூறுமைல்தூரம் ஓடும் தந்தைக்கும்

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப் பாடுபடும் ஓர் மாணுக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச்சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நாளை வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஈடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Venkatesan Press, Madras-1.